ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

28.09.2011 - மலர் 08, இதழ் 30



## செல்வங்களை அருளும் நவராத்திரி விழா

## நல்ல நல்ல பிள்ளைகள் நாம் உலகை வெல்லும் செல்வங்கள் நாம்

சர்வதேச சிறுவர் தினம்

## இலங்கையின் போக்குவரத்துத் துறையின் வரலாறு

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தலைவரின் செய்தி

நடந்த கிளர்ச்சி குறித்த தகவல்கள் கொழும்பிற்குக் கசிந்தன. இத்தகைய நிலையால் உடனடியாக கி.பி.1795 ஜூலை மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் ஆலோசனை சபையின் மாநாடு கூடியது. ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு எதிராகப் போரை ஆரம்பித்தால், முன்னைய அரசியலமைப்பின்படியே செயற்படுவதாக அறிக்கையை வெளியிடுவதென அங்கு கூடிய ஆலோசனை சபை தீர்மானித்தது. அவ்வாறு செய்வதால் அவர்களுக்கு எதிரான போரைத் தவிர்த்துக்கொள்ளலாம் என அவர்கள் எண்ணினர். இத்தகைய அறிக்கையை ஏற்றுக்கொள்ளாது, ஆங்கிலேயர் யுத்தம் செய்வதென ஏற்கனவே எடுத்த தீர்மானத்தைக் கைவிடாவிட்டால் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென ஒல்லாந்தர் தீர்மானித்தனர்.

இதற்கிடையில், இங்கிலாந்திற்குத் தப்பியோடி ஆங்கிலேயரின் பாதுகாப்பில் உள்ள ஒல்லாந்த தலைவர் செய்தியொன்றின்மூலம் கட்டளை ஒன்றைப் பிறப்பித்தார். அதாவது, ஆங்கிலப் படை அணிகளுக்கும் அவர்களின் யுத்தக் கப்பல்களுக்கும் நன்னம்பிக்கை முனை ஊடாக இலங்கைக்கு எவ்வித இடையூறுகளும் இல்லாமல் பிரவேசிக்க இடம் கொடுக்கும்படியும் அவர்களைத் தாக்க பிரான்ஸியர்களுக்கு இடமளிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். ஆங்கிலேயரின் தயவைப் பெறவே அவ்வாறு அவர் கட்டளையிட்டார். இந்த கட்டளைகள் அடங்கிய செய்தியை சென்னையில் உள்ள ஆங்கில ஆள்பதி சேர்.ஹோபார்ட் என்பவர் மூலம் இலங்கைக்கு அனுப்பினர். இச்செய்தியை கடற்படைக் குழுவொன்றே கொண்டு வந்தது. அக்கடற்படைக் குழு திருகோணமலைக்கு வந்ததும் தலைவரது செய்தியையும் ஆள்பதியினது கடிதத்தையும் கையளிக்க மேஜர் அக்னிவ் என்பவர் கொழும்பிற்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை தரம் 8 இற்கு மாற்றுவது நியாயமா?

## ஆசிரியர் கருத்து

அடுத்த வருடத்திற்கான தரம் 5 புலமைப்பரிசில் தொடர்பாக, கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தெளிவற்றதாகவும் குழப்பகர மானதாகவும் அமைந்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதாவது, அடுத்த வருடம் தொடக்கம் தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தப் படாமல் தரம் 8 இல் இப்பரீட்சையை நடாத்துவதற்கான ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை உடனடியாக நிறுத்தப்படாது என்ற கருத் தையும் அவர் முன்வைத்துள்ளார். இந்த தெளிவற்ற கருத்தானது, பெற்றோர் மத்தியில் குழப்பகரமான நிலைகளையே தோற்றுவித்துள்ளது.

எது எப்படியோ, ஏதோ ஒருவகையில் தரம் 5 இல் கல்வி கற்கின்ற மாண வர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை சுமையாக இருப்பதாலேயே அப்பரீட் சையை தரம் 8 இற்கு மாற்றவுள்ளதாக கல்வித்துறை அமைச்சர் தெரி வித்துள்ள கருத்தினைக் கவனத்தில் கொண்டால், அதனையொரு விவாதத்திற்குரிய கருத்தாகவே கொள்ளவேண்டியுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது, என்ன தேவையின் பொருட்டு, எந்த இலக்கை நோக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதைக் கவனத் தில்கொள்ள வேண்டியது இங்கு முக்கியமாகும். பிரதான பாடசாலைகளில் அனுமதியினை வழங்கல், நிதி உதவிகளை வழங்கல் ஆகியனவே இப் பரீட்சை நடாத்துவதன் பிரதான நோக்கமாகும். இத்தகைய நோக்கங்களை முதன்மைப்படுத்திப் பார்க்கையில், தரம் 5 தான் இதற்குப் பொருத்தமான நடுநிலைக் காலப்பருவம் என்று குறிப்பிட முடியும். தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் தமக்குக் கிடைக்க இருக்கின்ற புதிய பிரதான பாடசாலைகளில் மேலும் பல வருடங்களுக்கு தமது கல்வியை மாணவர்கள் தொடர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். அவ்வாறே, கிடைக் கின்ற நிதி உதவிகளைக்கூட, பாடசாலை மட்டத்தில் எடுத்துக்கொண்டால் உ/தரம் வரையில் சுமார் 7 வருடங்களுக்கு அதனைப் பெற்று கல்வியைத் தொடர முடியும்.

ஆனால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள உத்தேசத் திட்டத்திற்கமைய, 8 ஆம் தரத்தில் இப்பரீட்சையில் சித்திபெற்றபோதும் பிரதான பாடசாலை யில் அனுமதி வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், சித்திபெற்றவர்களுக்கு பிரதான பாடசாலையில் அனுமதி வழங்குவதாக இருந்தாலும்கூட, அங்கு ஆகக்கூடியது 4 வருடங்களுக்கு மாத்திரமே உ/தரம் வரை கல்வி கற்கக்கூடிய வாய்ப்புக் கிட்டும். அவ்வாறே, நிதி உதவியை எடுத்துக் கொண்டாலும் குறைந்த காலப்பருவத்திற்கே அந்த நிதி உதவியின் பயனைப் பெறக்கூடி யதாக இருக்கும். எனவே, இத்தகைய நிலை களைக்கொண்டு பார்க்கையில் புலமைப் பரிசில் பரீட்சை எதற்காக ஏற்படுத்தப் பட்டதோ, அந்த நோக்கத்திலிருந்து பின்வாங்குகின்ற தன்மையாகவே இதனைக் கருதமுடிகின்றது.

இங்கு கவனத்தில்கொள்ள வேண்டிய அடுத்த விடயம்; தற்போது தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவது மாணவர்களுக்கு சுமையாக இருப்பதாக கூறப்படுகின்ற கருத்தாகும். சில மதத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், கல் வித் துறைசார் வல்லுனர்கள் ஆகியோரே இவ்வாறு கருதுவதாகவும் அத்தகைய கார ணங்களுக்கு அமைவாகவே, தரம் 8 இற்கு புலமைப்பரிசில் பரீட்சை மாற்றப்படுவ தாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில், இந்த மூத்த தலைவர்களின் கருத்தினை கல்வித்துறை அமைச்சு தவறாகப் புரிந்துகொண்டுள்ளதாகவே தோன்றுகின்றது. ஏனெனில், தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு சுமையாக இருப்பதாக கூறப்படுவதன் உண்மையான அர்த்தம் அவர்களது வயதிற்கு மீறிய வகையில் தரம் கூடியதாக அப்பாட விடயங்கள், வினாக்கள் இருப்பதே ஆகும்.

இந்தக் கருத்தினை சரிவரப் புரிந்துகொள்ளாமல் 'சுமை' என்பதை புத்தகப்பைச் சுமை என்பதுபோல் கருதி தரம் 8 இற்கு இப்பரீட்சையை மாற்றுவது உரிய தீர்வா கத் தோன்றவில்லை. இதற்குரிய தீர்வாக அமைவது, தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் வயதிற்கு ஏற்ற முறையில் வினாக்களை வழங்குவதேயாகும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சில வினாக்கள் சாதாரண தரத்தில் பயிலும் மாணவர் களால்கூட பதிலளிக்க முடியாததாக இருப்பதை நாம் காண்கின்றோம். இதனைத் தான் 'சுமை' என்று சுட்டிக்காட்டப்படுகின்றதென்பதை உரியவர்கள் உணர வேண்டும்.

இத்தகைய நிலையில், இன்னொரு கேள்வியும் இங்கு எழுகின்றது.

அடுத்த வருடம் தொடக்கம் 8 ஆம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப் படுமாயின், அந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் ஏற்கனவே தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியவர்களாகவே இருக்கப் போகின்றனர். உதார ணத்திற்கு, 2009 ஆம் ஆண்டில் தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற் றியவர்களே, அடுத்த வருடம் (2012) இல் தரம் 8 இற்கு செல்லவுள்ளனர். எனவே, அவர்கள் மீண்டும் இன்னொரு புலமைப்பரிசில் பரீட்சையை எழுதுவதற்கான கட்டாய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்தக் குளறுபடிகள் தெரிந்து செய்யப் பட்டுள்ளதா? அல்லது சிந்திக்காமல் செய்யப்பட்டுள்ளதா? என்பது புரியவில்லை.

எனவே, நாம் ஒட்டுமொத்தமாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், புல மைப்பரிசில் பரீட்சையின் நோக்கத்திற்கு அமைவாக, தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவதில் தவறில்லை. ஆனால், அது மாணவர்களுக்கு அழுத் தத்தை ஏற்படுத்தாத வகையில், வயதிற்கேற்றவாறான வினாக்களை மையப்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும் என்பதே இதில் முக்கியமாக கவனத்தில்கொள்ளப்பட வேண்டிய விடயமாகின்றது. இதனையே கல்வித்துறை அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு,

வி.ரெட்லி ஹெரிசன் (ஆசிரியர்)

---

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்:

## அதிருப்தியளிப்பதாக இருந்தால் மட்டுமே மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

### பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

(எஸ்.எல்.மன்சூர்)

இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், எந்தவொரு வினாத்தாளும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட மாட்டாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.



எனினும், எவரேனும் ஒரு பரீட்சார்த்தியின் பெறுபேறு திருப்திகாண முடியாதவாறு இருந்தால் மட்டும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து மீள் பரிசீலனைக்கு விண்ணப் பிக்க வேண்டும்.

அதன்படி, மீள் பரிசீலனைக்கான விண்ணப் பங்கள் பாடசாலை அதிபராலேயே சமர்ப் பிக்கப்படல் வேண் டும். அத்துடன், விண் ணப்பிக்க வேண்டிய முறை மற்றும் அறிவு றுத்தல்கள் சகல பாட சாலை அதிபர்களுக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.


விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479833,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


### 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். பிந்திக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.

---

பாடசாலைகளில்:

## கல்வித் தரத் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய கல்வித் தரத் தினத்தை சகல பாடசாலை களிலும் அனுஷ்டிப்பதற் கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சகல மாகாணக் கல்விப் பணிப்பா ளர்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம்.குணசேகர கடிதமூலம் அறிவிப்பு விடுத்துள்ளார் என அறியக்கிடைக்கின்றது.



இவ்வாண்டுக்கான தேசிய கல்வித் தரத் தினமானது 'தரமான கல்விக்கு தரமான பாடசாலை' என்ற தொனிப்பொருளின்கீழ் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினத்தில் பாடசாலைகளில் பாடசாலைக் கல்வியின் பண்புத்தர அபிவிருத் திக்காக வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன், சகல பாட சாலைகளிலும் இவ்வாண்டுக் கான தொனிப்பொருள் வாசகம் தாங்கிய பதாகைகளைக் காட்சிப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, மேலும் பல அறிவுறுத்தல்கள் அக்கடிதத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.


30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லா மாவண/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.



எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4300

நி.கோகுலரமணன், பன்னாகம், சுழிபுரம்.



அங்.இல: 4301

ஜே.எம்.உஸ்மான், வாண் வீதி, புத்தளம்.



அங்.இல: 4302

பீ.நிவேதா, கந்தல் ஓயா, கேகாலை.



அங்.இல: 4303

பி.தில்ருக்ஷி, ஹல்காயேன பிரிவு, பதுறலிய.



அங்.இல: 4304

பி.இஸாணி, ஹல்காயேன பிரிவு, பதுறலிய.



அங்.இல: 4305

பொ.தர்சிகன், மடத்தடி வீதி குடியிருப்பு, வவுனியா.

## சாதனையாளர்: நுண்ணுயிரியல்

# ரொபர்ட் கோச்



(1843-1910)

**1843** ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி ஜேர்மனியில் ஹனோவர் என்ற நகருக்கு அருகிலுள்ள கிளவுஸ்தால் எனும் ஊரில் ரொபர்ட் கோச் பிறந்தார். கோட்டிஜென் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படித்து 1866 இல் மருத்துவத்தில் முதுகலைப்பட்டம் பெற்றார். சிறிதுகாலம் போர்ப்படையில் மருத்துவராகப் பணிபுரிந்தார். பின் தனியாக மருத்துவத் தொழிலில் ஈடுபட்டார்.

அக்காலத்தில் உலகெங்கிலும் 'தொண்டை அடைப்பான்' நோயால் ஆடு, மாடுகள் பல பலியாகின. மேய்ச்சல் நிலங்களில் இருந்தே 'தொண்டை அடைப்பான்' நோய் பரவுவதால் அது கடவுளின் சாபம் என பாமர மக்கள் நம்பினர். இத்தகைய சூழ்நிலையில்தான் பிரான்ஸில் பாஸ்டியரும் ஜேர்மனியில் ரொபர்ட் கோச் அவர்களும் இதுபற்றிய ஆய்வுகளைத் தனித்தனியாக மேற்கொண்டனர்.

ரொபர்ட் கோச் எளிய முறையில் நவீன ஆய்வுக் கருவிகள் எதுவுமின்றி அந்த்ரெக்ஸ் (Anthrax) என்னும் தொண்டை அடைப்பான் நோய்க்கிருமிகளைப் பற்றியே முதலில் ஆராய்ந்தார். இவரது ஆய்வுகள் மிக நுட்பமானவை. நுண்ணுயிரியல் (Micro Biology) எனும் தனியானதொரு துறை உருவாவதற்கு ரொபர்ட் கோச் அவர்களே, காரணகர்த்தாவாக இருந்தார். இதனால், இவர் 'நுண்ணுயிரியலின் தந்தை' என போற்றப்படுகிறார்.

தனி ஓர் இடையீட்டுப் பொருளில் அந்த்ரெக்ஸ் நோய்க்கான நுண்ணுயிரிகளை வளர்த்து அந்நுண்ணியிரிகள் எவ்வாறு பல்கிப் பெருக்கமடைகின்றன என்பதை ஆய்வுகூடத்தில் வைத்தே நிரூபித்து அதற்கு 'தொங்கும் துளி' என பெயர் வைத்தார். நோய்க்கிருமிகளை ஒரு தனி இடையீட்டுப் பொருளில் வளர்த்து ஆராயும் முறை இன்றும் ஆய்வுகூடங்களில் செயற்படுத்தப்படுகிறது. இதற்கு 'ரொபர்ட் கோச்' அவர்களை கௌரவிக்கும் முகமாக, 'கோச் முறை' என்றே தற்போதும் அழைக்கப்படுகின்றது.

இதே முறையைப் பயன்படுத்தி காசநோய் கிருமிகளையும் ஆராய்ந்தார். அதன் விளைவாக அக்கிருமிகளை அழிப்பதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. 1870 இல் 'அனிலின்டை' எனும் ரசாயனப் பொருளைப் பயன்படுத்தி பக்றீரியாக்களுக்கு நிறமேற்றி ஆராயும் முறையையும் இவரே அறிமுகம் செய்தார். அவ்வாறு நிறமேற்றி ஆராயும்போது, இலகுவாக பக்றீரியாக்களை இனங்காண முடிந்தது. அதனை நுணுக்குக்காட்டியில் தெளிவாகப் பார்த்து அதனை புகைப்படமும் எடுத்துக்கொண்டார். நுண்ணுயிர்களின் உருவ அமைப்பை உலகில் முதன்முதலில் புகைப்படம் எடுத்ததும் ரொபர்ட் கோச் அவர்களே.

1880 இல் ஜேர்மனிய அரசு இவருக்கு அனைத்து வசதிகளையும்கொண்ட ஆய்வுகூடத்தை அமைத்துக்கொடுத்தது. அந்த்ரெக்ஸ் காசநோய், கொலரா போன்ற உயிர்க்கொல்லி நோய்களுக்கான பக்றீரியாக்களை தனித்தனியே கண்டுபிடித்ததோடு, அவற்றை அழித்து நோயாளியைக் காப்பாற்றும் முறையையும் கண்டறிந்தார். இதற்காக 1905 இல் மருத்துவதுறைக்கான 'நொபெல்' பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. மருத்துவ மேதையான மனிதக்காவலர் ரொபர்ட் கோச் 1910 மே மாதம் 27 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**ஆர்.ஜே**

# விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் 2012 ஆம் ஆண்டு நாட்காட்டிக்கு வரையுங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!

*விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனம் 2012 ஆம் ஆண்டுக்காக அச்சிட உத்தேசித்துள்ள நாட்காட்டியை மாணவர்களாகிய உங்களின் கைவண்ணத்தினாலான ஓவியங்களால் அலங்கரிக்க எண்ணியுள்ளோம். அதற்குத் தகுந்த ஓவியங்களை தேர்ந்தெடுப்பதற்காக பாடசாலை மாணவர்களுக்கிடையே ஓவியப் போட்டியொன்று நடாத்தப்படவுள்ளது. அந்தப் போட்டியில் பன்னிரெண்டு மாதங்களில் ஒவ்வொரு மாதத்திற்கும் உரித்தான தொனிப்பொருளின் அடிப்படையில் வர்ண ஓவியங்களை வரைந்து சமர்ப்பிக்கலாம். போட்டிக் கூப்பனைப் பூர்த்திசெய்து நீங்கள் வரைந்தனுப்பும் ஓவியத்துடன் இணைத்து அனுப்புங்கள்.*



**போட்டி விபரங்கள்:**

- பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.
- ஒருவர் ஒரு மாதத்திற்குரிய அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாதங்களுக்குரிய ஓவியங்களை வரைந்து அனுப்பலாம்.
- "15X10" அங்குலமுடைய தாளில் ஓவியங்களை வரைய வேண்டும்.
- அனுப்பப்படும் சகல ஓவியங்களும் உங்களின் படைப்பு என்பதை வகுப்பாசிரியரால் அல்லது பாடசாலை அதிபரால் உறுதிபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- தெரிவுசெய்யப்படும் ஓவியத்திற்கு 2000 ரூபா பெறுமதியான பரிசும் சான்றிதழும் வழங்கப்படுவதோடு, மிகச் சிறந்த 100 ஓவியங்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- நிறந்தீட்டல்: நீங்கள் விரும்பியதைப் பயன்படுத்தலாம் (உ+ம்: பெஸ்டல், நீர்ச்சாயம்)

**2012 நாட்காட்டிக்கான போட்டிக் கூப்பன்**

பெயர்: ..............................

முகவரி: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................

அதிபர்/வகுப்பாசிரியர் கையொப்பம்

ஓவியங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: ஒக்டோபர் 05.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

நாட்காட்டிக்கு ஓர் ஓவியம்,
த.பெ.இல.2037,
கொழும்பு.

## ஒவ்வொரு மாதத்திற்குமான தொனிப்பொருள்

**ஜனவரி மாதம்:** புதிய வருடத்தின் முதலாவது பாடசாலைத் தவணை ஜனவரி மாதத்திலேயே ஆரம்பமாகின்றது. தமிழர் திருநாளான தைப்பொங்கல் ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படுகின்றது. அத்தோடு, புத்தரின் முதலாவது இலங்கை விஜயமும் இம்மாதம் 'துருது' போய தினத்திலேயே ஆகும்.

**பெப்ரவரி மாதம்:** பெப்ரவரி 04 ஆம் திகதி சகல இன மக்களின் பங்குபற்றுதலோடு, இலங்கையின் சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

**மார்ச் மாதம்:** மகா சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்துக்களுக்கு முக்கியத்துவம் நிறைந்த இத்தினத்தில் சிவபெருமானை குறித்துப் பூஜைகள் நடைபெறும்.

**ஏப்ரல் மாதம்:** மரம், செடி கொடிகள் பூத்துக் குலுங்கும் வசந்தகாலம். குயில்களின் ஓசை மற்றும் றபான், பட்டாசு சத்தங்களின் மத்தியில் தமிழ்-சிங்களப் புத்தாண்டு பிறக்கும் மாதமிது. புத்தாடை தரித்து, புண்ணியங்கள் செய்து, கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு, பல்சுவை உணவு உண்டு, பெரியோரை வணங்கி, ஊஞ்சலாடி, உறவுகளுடன் இனிதே மகிழும் காலமிது.

**மே மாதம்:** புத்தபிரான் பிறந்ததும் ஞானம் பெற்றதும் மரணித்ததும் இம்மாதத்தில் வரும் வெசாக் போயா தினத்தில் (வைகாசி பௌர்ணமி) ஆகும். தொழிலாளர் தினமாகிய மே தினமும் இம்மாதத்திலேயே அனுஷ்டிக்கப்படுகின்றது.

**ஜூன் மாதம்:** மகிந்த தேரரின் தலைமையிலான குழு மிகிந்தலைக்கு வந்ததும் இலங்கைக்கு பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்ட 'பொசொன்' போயா தினமும் இம்மாதத்தில் ஆகும்.

**ஜூலை மாதம்:** கண்டி தலதா மாளிகையின் வருடாந்த தலதா பெரஹெர இம்மாதத்திலேயே நடைபெறுகின்றது.

**ஓகஸ்ட் மாதம்:** பாடசாலை விடுமுறை மாதமாகும். பட்டம் விடுவதற்கு ஏற்ற காலம். முஸ்லிம்களின் நோன்புப் பெருநாளும் இம்மாதத்திலேயே கொண்டாடப்படுகின்றது.

**செப்டெம்பர் மாதம்:** இலக்கிய மாதம். அரச இலக்கிய விழாக்கள் பலவும் இம்மாதத்தில் நடந்தேறும்.

**ஒக்டோபர் மாதம்:** முஸ்லிம்களின் ஹஜ்ஜுப் பெருநாள் இம்மாதத்தில்தான் கொண்டாடப்படுகின்றது. இம்மாதத்தில் முஸ்லிம்கள் புனித மக்கா நகருக்கு யாத்திரை மேற்கொள்வர்.

**நொவெம்பர் மாதம்:** தமிழ் மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாகிய தீபத் திருநாளான தீபாவளிப் பண்டிகை இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றது.

**டிசம்பர் மாதம்:** பாடசாலை விடுமுறை காலமாகும். சிவனொளிபாத மலை யாத்திரை ஆரம்பமாகும் காலம். இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன், சாந்தியும் சமாதானமும் நிறைந்த நத்தார் பண்டிகை இம்மாதமே கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

## முகாமைத்துவம் - 74

### கற்றலுக்கான ஆலோசனைகள்





மாணவர்களின் சிறந்த வழிகாட்டி அவர்களின் பெற்றோர்களாவர். அந்தவகையில், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களும் பெரும் பங்காளிகளாகத் திகழ்கின்றனர். மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பானது, அவர்களது கல்வியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே, மாணவர்கள் தமது பெற்றோர்களுடனான தொடர்பை வலுவானதாகவும் சிறந்த முறையிலும் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.



# கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்-பெற்றோர் தொடர்பு

### மாணவர்கள் செய்ய வேண்டியவை

✱ உங்களுக்கு கல்வி சார்ந்த அல்லது வேறேதும் பிரச்சினைகள், சிக்கல்கள் தோன்றும்போது, அவற்றை முதலில் உங்கள் பெற்றோர்களிடம் கூறுங்கள். ஏனெனில், அவர்களால்தான் உங்கள் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வை வழங்கமுடியும். அவர்கள் உங்களுக்கு ஏற்ற ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவார்கள். அதற்கமைய, நீங்கள் செயற்படுவதனூடாக, உறுதியாகவும் சிறப்பாகவும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடலாம்.

✱ நீங்கள் எங்கேனும் செல்வதாக இருந்தால், இயன்றளவு உங்கள் பெற்றோருடன் செல்லுங்கள் அல்லது பெற்றோரின் கண்காணிப்பில் இருந்துகொள்ளுங்கள். இது உங்களுக்கு ஏற்படவுள்ள ஆபத்துக்களை முன்கூட்டியே தடுத்து நிறுத்தும்.

✱ பரீட்சையில் குறைவான புள்ளிகள் எடுத்தால், அதனையிட்டு மனம் வருந்தாமல் பெற்றோரின் ஆலோசனைப்படி செயற்படுங்கள். அவர்கள் உங்கள் முன்னேற்றத்துக்கேற்ற வழிகளைக் கூறுவார்கள்.

✱ உங்களுக்கு ஏதாவது சான்றிதழ்கள், பரிசில்கள் கிடைத்தால் அல்லது அது போன்ற ஏதேனும் மகிழ்ச்சியான விடயங்கள் நிகழ்ந்தால் அவற்றை பெற்றோர்களுக்குக் கூறுங்கள்.

✱ நீங்கள் பழகும் நண்பர்களை உங்களது பெற்றோர்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் உங்களைப் பற்றியும் உங்களது நண்பர்கள் பற்றியும் சரியான மதிப்பீட்டையும் நம்பிக்கையையும் கொண்டிருப்பார்கள். இதனால், உங்களது நட்பையும் மதித்து நடப்பார்கள்.

✱ வீட்டிலிருக்கும்போது, கற்றலில் ஈடுபடும் நேரம் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பெற்றோர்களுக்கு சிறு சிறு உதவிகளைச் செய்யுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கும் உங்களது பெற்றோருக்கும் இடையிலான தொடர்பு மேலும் வலுப்படும்.





✱ உங்களுக்கு ஏதாவது தேவை ஏற்பட்டால், அதைத் தயங்காமல் பெற்றோரிடம் கேளுங்கள். ஆனால், அது வீண் செலவாக இருக்கலாகாது. உங்களது எதிர்கால இலக்குகளை பெற்றோர்களிடம் கூறி, அவர்களது ஆலோசனைகளையும் ஆசீர்வாதத்தையும் பெறுங்கள்.

✱ உங்களது கல்வியில் நீங்கள் இருக்கும் நிலையை உங்கள் பெற்றோரிடம் எடுத்துக் கூறுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் உங்களது கல்வி மட்டத்தை அறிந்து, உங்களது கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

எனவே, உங்கள் கல்வி வாழ்க்கையில் உங்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான தொடர்பு மிக முக்கியமானது. ஏனெனில், அத்தொடர்பில் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் அது உங்கள் கல்வியையும் இணைத்துப் பாதிக்கும். ஆகவே, உங்கள் பெற்றோருடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அது உங்களை மட்டுமல்ல உங்கள் கற்றலையும் பலப்படுத்தும். (தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# சந்திரனை ஆராய இரு செய்மதிகள்



சந்திரனின் ஈர்ப்புவிசை மற்றும் அதன் அமைப்பு குறித்த முழுமையான விபரங்களைத் திரட்டுவதற்காக, கடந்த 10 ஆம் திகதி கேப் கெனவரலில் உள்ள விமானப் படை தளத்தில் இருந்து டெல்டா 2 என்ற ரொக் கெட் மூலம் இரண்டு செய்மதிகளை நாஸா விண்ணுக்கு ஏவியது.

இதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அதி நவீன திறன் கொண்டதாக இந்த செய்மதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேற்படி இரண்டு செய்மதிகளையும் தாங்கிச் சென்ற டெல்டா 2 ரொக்கெட் 3 மாதகால பயணத்திற்குப் பின்னர் சந்திரனை சென்றடையும் என நாஸா அறிவித்துள்ளது.



# ஒளிரும் சனிக்கிரக வளையங்கள்






சூரியக் குடும்பத்தில் உள்ள இரண்டாவது பெரிய கிரகமான சனிக்கிரகத்தை சுற்றி அமைந்துள்ள அதன் வளையங்களின் வெளிப்புறப் பகுதிகள் விளக்குகள் தரும் வெளிச்சத்தைப் போன்று ஒளியைப் பரப்புவதாக விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சனிக்கிரகத்தின் ஒளிரும் வளையங்களின் காட்சியை கெசினி ஹியூஜென்ஸ் விண்கலம் படம் பிடித்து அனுப்பியுள்ளது.



பூமியில் இருந்து சுமார் 8,000 லட்சம் மைல் தொலைவில் அமைந்துள்ள சனிக்கிரகமானது, ஒளிரும் வளையங்களுடன் இரவில் வானில் கண்காட்சி தருவதை விண்கல கெமெராக்கள் படம்பிடித்து அண்மையில் நாஸாவின் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பியிருந்தது.

# 50 புதிய புறக்கோள்கள் கண்டுபிடிப்பு


**சிலியின் லா சில்லா வானியல் அவதான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள 3.6 மீற்றர் நீளமான 'ஹார்ப்ஸ்' (HARPS) என்ற நுண்தொலை நோக்கிமூலம் எமது சூரியக் குடும்பத்துக்கு வெளியே இதுவரை அறியப்படாத ஐம்பது புதிய புறக்கோள்களை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

**புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த ஐம்பது புறக்கோள்களில் பதினாறு புறக்கோள்கள் எமது பூமியைவிடப் பெரியதாகவும் ஆனால், வியாழனைவிட சிறியதாகவும் உள்ளன. இவை 'சுப்பர் ஏர்த்ஸ்' (Super Earths) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு புறக்கோள் உயிரினங்கள் வாழக்கூடிய வலயத்தினுள் இருப்பதாக கூறப்படுகின்றது.**



**புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மேற்படி புறக்கோள்களில் ஐந்து புறக்கோள்கள் பூமியின் ஐந்து மடங்கிலும் சற்றுக் குறைவான பருமனைக் கொண்டுள்ளன. இதேவேளை, "உயிரினங்களைத் தேடும் பணி எதிர்காலத்தில் இந்த புறக்கோள்களை மையப்படுத்தி இடம்பெறும் என நாம் நம்புகிறோம்" என்று ஜெனீவா வானியல் அவதான நிலையத்தைச் சேர்ந்த வானியலாளர் பிரான் செஸ்கோ பெபே தெரிவித்துள்ளார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அக்கால சென்சிபார்

பயணம் 02

# நைல் நதியின் ஆரம்பத்

## பேர்டன் மற்றும் ஸ்பெக்கின் விரப்பயணத்தில்...

ஆபிரிக்காவின் ஒரு கடற்கரைப் பகுதியை மட்டுமே ஐரோப்பியர்கள் நன்றாக அறிந்து வைத்திருந்தனர். அதுதான் கிழக்காபிரிக்கக் கடற்கரை. அதற்கு அருகில்தான் சென்சிபார் எனும் நகரம் அமைந்திருந்தது. அக்காலகட்டத்தில் உலகப் பிரசித்திபெற்ற வர்த்தக நகராக அது திகழ்ந்தது. இத்தகைய காரணத்தால்தான் பேர்டனும் ஸ்பெக்கும் தமது பயணத்தை ஆரம்பிக்க அந்த நகரத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அந்நகர மக்கள் நூற்றாண்டு காலமாக ஐரோப்பியருடன் வர்த்தகம் புரிந்த காரணத்தால், அவர்களுக்கு ஆங்கில மொழி பற்றிய அறிவும் நிறைந்து காணப்பட்டது. இதனால், அவர்களில் மொழிபெயர்ப்பாளர்களையும் வழிகாட்டிகளையும் தேடிக்கொள்ள பேர்டன் மற்றும் ஸ்பெக்கினால் முடிந்தது.

## சென்சிபாரின் சுல்தான்

1857 ஆம் ஆண்டுதான் பேர்டனும் ஸ்பெக்கும் சென்சிபாருக்கு வந்தனர். அக்காலகட்டத்தில் அந்த நாட்டை அதிகாரம் மிக்க சுல்தான் ஒருவரே ஆட்சிபுரிந்து வந்தார். அவர் இவர்களது சாகசம் நிறைந்த பயணம் குறித்து மிகவும் அக்கறை கொண்டார். அவர்களைத் தனது மாளிகைக்கு அழைத்து மிகப்பெரும் வரவேற்பை அளித்து படகொன்றின்மூலம், சென்சிபாரிலிருந்து ஆபிரிக்காவின் பிரதான பகுதிகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். இத்தகைய காலத்தில் சென்சிபார் நகரம் வியாபார ரீதியில் மிகுந்த பரபரப்பான நகரமாகத் திகழ்ந்தது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் அங்கு குவிந்தனர். வியாபாரப் பொருட்கள் உட்பட, அடிமைகளும் அங்கே விற்பனை செய்யப்பட்டனர்.

## அடிமை வியாபாரம்

18,19 ஆம் நூற்றாண்டுகளில் ஆபிரிக்காவிலிருந்த பல்வேறு இனத்தினர் பெரும் தொகையாகப் பிடிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு விற்கும் வியாபாரம் பரவலாக நடைபெற்றது. இவ்வாறு பிடிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு எந்த உரிமையும் இருக்கவில்லை. அவர்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். இவ்வாறு ஆபிரிக்காவில் அடிமைகளை வாங்கிய வியாபாரிகள் அவர்களில் அநேகரை சென்சிபாரிலிருந்தே கப்பலேற்றினர். ஆயினும், 1833 ஆம் ஆண்டுக்காலப்பகுதிகளில் இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் தடைசெய்யப்பட்டது. இதன் பின்னர் 1865 ஆம் ஆண்டு அமெரிக்காவினாலும் தடைசெய்யப்பட்டது. இவ்வாறு தடைவிதிக்கப்படும் காலகட்டத்தில்தான் பேர்டனும் ஸ்பெக்கும் ஆபிரிக்காவுக்குத் தமது பூகோள ஆராய்ச்சிப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

## குழுவில் இணைக்கப்பட்ட கூட்டத்தினர்

பேர்டன் மற்றும் ஸ்பெக் இருவரும் ஆபிரிக்காவுக்குப் பயணிப்பதற்குமுன் அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவற்றில் பிரதானமானது, ஆராய்ச்சிப் பயணத்துக்காக, அவர்களோடு பயணிக்க நல்லதொரு குழுவை இணைப்பதாகும். அதற்கு மொழிபெயர்ப்பாளர்களும் வழிகாட்டிகளும் பொதி சுமப்பவர்களும் தேவைப்பட்டனர். அவர்களது பொருட்களில் கூடாரங்கள், சமையல் பாத்திரங்கள், உணவு மற்றும் பான வகைகள், கல்வி உபகரணங்கள் ஆகியவற்றோடு, வழியில் சந்திக்கும் கிராமத் தலைவர்களுக்கு வழங்கப் பரிசுகளும் இருந்தன. அத்துடன், பலுகிஸ்தானிலிருந்து வந்த படை வீரர்களும் இவர்களுடன் இணைந்துகொண்டனர்.

## யானைத்தந்த வியாபாரம்

பேர்டனும் ஸ்பெக்கும் தமது ஆராய்ச்சிப் பயணத்தை ஆரம்பிக்கையில், யானைத்தந்த வியாபாரம் ஆபிரிக்காவில் பரவலாக நடைபெற்று வந்தது. அடிமை வியாபாரத்தைப் போன்றே இதுவும் உலகப் பிரசித்தி பெற்றிருந்தது. இத்தகைய நடவடிக்கைகளுக்கு முக்கிய சந்தைப்பகுதியாக சென்சிபாரே திகழ்ந்தது.

மேற்படி தந்தங்களில் நுணுக்கமான செதுக்கல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் முக்கிய வர்த்தகப்பொருட்களாக அவை கணிக்கப்பட்டு சந்தையில் [illegible] விலைக்கு விற்கப்பட்டன. இத்தகைய காரணங்களினால் தந்தங்களைப் பெறுவதற்கு முழு ஆபிரிக்காவிலும் ஏராளமான யானைகள் கொல்லப்பட்டன. எனினும், தற்போது ஆபிரிக்காவிலுள்ள பல நாடுகளில் யானை வேட்டையை மட்டுமல்ல; யானைத்தந்தத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களைக்கூட விற்க சட்டத்தின்மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது.








கிளிமஞ்சாரோ மலை

ஆபிரிக்கக்காட்டு விலங்குகள்


## பயண ஆரம்பம்

1857 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி பேர்டனும் ஸ்பெக்கும் தமது குழுவினரோடு சென்சிபாரிலிருந்து ஆபிரிக்காவின் பிரதான பகுதிகளுக்குப் படகுகள் மூலம் பயணிக்க ஆரம்பித்தனர். அதற்குமுன்னர் அவர்கள் எப்போதுமே அப்பகுதிகளுக்குச் சென்றதில்லை. எனவே, அங்கே பார்த்த அனைத்து விபரங்களையும் பயணக்குறிப்புக்களில் பதிவு செய்துகொண்டனர். அவர்கள் பயணித்த சிறிய படகு 'பெக்மோயோ' எனும் கடற்கரை நகரைச் சென்றடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆபிரிக்க சுதேசிய இனத்தினர் பலர் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமைகளாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவது பரவலாக இடம்பெற்றது. இது 'அடிமை வர்த்தகம்' என்றே அழைக்கப்பட்டது. இவ்வாறு பலவந்தமாக சிறைப்பிடிக்கப்படும் அப்பாவிகளுக்கு எவ்வித அடிப்படை உரிமைகளும் வழங்கப்படவில்லை

அடிமை வர்த்தகமும் அடிமைகளும்





# தைத் தேடி...

## கடற்கரைவழியாக நாட்டுக்குள்

ஜூன் மாதம் 27 ஆம் திகதி ஆராய்ச்சிக் குழுவினர் பெக்மோயோ நகரிலிருந்து வெளியேறி கடற்கரை வழியாகச்சென்று ஆபிரிக்காவை அடைந்தனர். அக்குழுவில் 200 பேர்வரை இருந்தனர் . அவர்கள் மத்தியில் ஆங்கிலேயர் இருவரோடு, ஆபிரிக்கரும் ஆசியரும் பெருமளவில் இருந்தனர். அங்கிருந்த சுதேசியருக்கு இவர்களின் வருகை புது அ●பவமாக இருந்தது. சென்சிபாரிலிருந்து குழுவில் சேர்க்கப்பட்ட சுதேசியரில் வழிகாட்டியான சித் முபாரக் மீதே ஆராய்ச்சியாளர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர்.

## சித் முபாரக்

யோ எனும் இனத்தைச் சேர்ந்த ஆபிரிக்கரே இவர்.



தற்போதைய சென்சிபார்





இவரே ஆராய்ச்சிக்குழுவுக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தார். அத்தோடு, வழிகாட்டியுமானார். பேர்டனும் ஸ்பெக்கும் அவரை சென்சிபாரில் வைத்தே தமது குழுவில் இணைத்துக்கொண்டனர். அப்போது அவரது வயது பதினெட்டாக இருந்தது. அவர் ஹிந்தி மொழியையும் ஸ்வஹிலி மொழியையும் நன்றாகப் பேசக்கூடியவராக இருந்தார். பேர்டனுக்கும் ஹிந்தி மொழி தெரிந்திருந்த காரணத்தால் அதுவே, அவர்கள் இருவருக்கும் சுலபமாகப் பேச வாய்ப்பாகியது. வெள்ளையர் இருவரோடு தாம் சென்ற துணிகரப் பயணம் குறித்து பல வருடங்களின் பின்னர் சித் முபாரக் ஒரு புத்தகத்தை எழுதியிருந்தார்.

## ஆபிரிக்காவின் காட்டுக்கு நடுவே....

ஆராய்ச்சிக்குழுவினர் பகலில் அடர்ந்த காட்டுப்பகுதிகள் பள்ளத்தாக்குகள் மற்றும் மேட்டு நிலங்கள் ஆகியவற்றையும் கடந்து இரவில் காட்டு மரச்செடிகளால் சூழப்பட்ட பாதுகாப்பான இடங்களில் தமது முகாம்களை அமைத்தனர். விடியும்வரை தீ மூட்டி கடும் குளிரைத் தணித்தனர். படைவீரர்கள் முகாமை மாறி மாறிப் பாதுகாத்தனர். அவர்கள் துப்பாக்கிகளைத் தயார்நிலையில் வைத்தபடி சதா விழிப்புடன் இருந்தனர். அடர்ந்த ஆபிரிக்கக் காட்டுப்பகுதிகளின் நடுவே பயணிப்பது ஆபத்தை விலைகொடுத்து வாங்கும் செயல். ஆகையால், இத்தகைய தயார் நிலையில் அவர்கள் இருக்கவேண்டிய நிலை இருந்தது.

## படைவீரர்களின் சதி

இத்தகைய கடுமையான பயணத்தில் ஒருநாள் மாலை ஓய்வு எடுக்கும்போது, படைவீரர்கள் இருவர் ஹிந்தி மொழியில் ரகசியம் பேசியது எதிர்பாராத விதமாக பேர்டனின் காதில் விழுந்தது. உடனே தனக்கும் ஸ்பெக்குக்கும் எதிராகச் சதிசெய்யப் படைவீரர்கள் முயற்சிசெய்வதை அவர் புரிந்துகொண்டார். சுமைதூக்கிகள் கொண்டுவரும் பெறுமதிமிக்க பொருட்களை களவாடிச் செல்லவே படை வீரர்கள் அவ்விதம் சதிசெய்தனர். இவ்விடயம் தெரியவந்தபோதும் படை வீரர்களுக்கு எதிராகச் செயற்பட பேர்டன் விரும்பவில்லை. அவ்விதம் செயற்படின், அவர்களது ஆராய்ச்சிப் பயணத்திற்கு அது பெரும் பாதிப்பாக அமையும் எனக் கருதினார். எனவே, வருவதை எதிர்கொள்ளத் தயாரானார்.

## 'வசமராமோ' இனத்தினர்

கடற்கரை வழியாக ஆபிரிக்காவுக்கு ஆராய்ச்சியாளர்கள் செல்கையில் பல்வேறு இனத்தினரையும் அவர்கள் வாழும் கிராமங்களையும் அவர்களின் விவசாய நிலங்களையும் காண நேர்ந்தது. கிழங்கு வகைகளும் தானிய வகைகளும் அவற்றில் விளைச்சல் செய்யப்பட்டிருந்தன. அக்கிராமங்களில் களிமண் சுவற்றுடன் புல்லால் வேயப்பட்ட கூரையுடனும் குடிசைகள் அருகருகே அமைந்திருந்தன. கிராமத்தைச் சுற்றி முட்செடிகளால் வேலி போடப்பட்டிருந்தது.

'வசமராமோ' எனப்படும் இனத்தினரில் ஒரு குழுவினர் தமது நஞ்சு பூசப்பட்ட ஈட்டிகளால் ஆய்வுக்குழுவினரைத் தாக்க முயன்றனர். அவர்கள் சென்ற பாதையை வழிமறித்து, அவர்களில் எவரும் தப்பிப்போக முடியாதபடி சுற்றிவளைத்தனர். அவர்களில் சிலரது கைகளில் கோடரிகளும் நச்சு அம்புகளும் காணப்பட்டன. தமது கிராமத்தைக் கடந்து செல்லவேண்டுமாயின், தமது குழுவினருக்கு ஆய்வாளர்கள் கப்பம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

## ஹோரகோ

சுதேச இனத் தலைவர்களிடமிருந்து தீங்கின்றித் தப்பிப்போக வேண்டுமாயின், அவர்களுக்குக் கப்பம் செலுத்தியாகவேண்டும் எனத் தமது பயணத்தின் ஆரம்பகட்டத்தில் பேர்டனும் ஸ்பெக்கும் தெரிந்து வைத்திருந்தனர். அதற்கமைய, எடுத்து வந்திருந்த அன்பளிப்பு 'ஹோரகோ' என்று அழைக்கப்பட்டது. அது கிராமத்தைக் கடக்க அறவிடப்படும் வரிப் பணத்தை உள்ளிட்டது. எனினும், அவர்களின் தேவை பணமல்ல; உணவுகள், உணவுச்சுவையூட்டிகள், உடைகளேயாகும்.


## மாபெரும் 'ரிப்ட்' மணல் திட்டு

வசமராமோ இனத்தினரிடம் அவர்கள் கேட்ட கப்பத்தை செலுத்தியபின், அங்கிருந்து அகன்ற ஆராய்ச்சிக் குழுவினர் மாபெரும் மணல் திட்டு வழியாகப் பயணித்தனர். அந்த மணல் திட்டு 'ரிப்ட்' மணல் திட்டாகும். அது கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள மொசாம்பிக் எனும் நாட்டிலிருந்து வட ஆபிரிக்காவிலுள்ள எதியோப்பியா, ஜோர்தான், அரேபியா ஆகிய நாடுகள் வரை பரந்திருந்தது. அது தரையிலிருந்து இரு அடுக்குகளுக்கு மேலாக அமைந்திருந்தது. அத்துடன், 'கிளிமஞ்சாரோ' எனும் மலையும் அங்குதான் அமைந்துள்ளது.





(பேர்டன் மற்றும் ஸ்பெக்கின் வீரப்பயணம் அடுத்த வாரமும்....)



ஆபிரிக்க அடிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்னல் எரிமலை

# கொஸ்டா ரிகா

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரப் பிரகடனம் - 1821 செப்டெம்பர் 15, மெக்ஸிகோவிடமிருந்து (முதலாவது மெக்ஸிகன் சக்கராதிபத்தியம்)- 1823 ஜூலை 1, மத்திய அமெரிக்க கூட்டமைப்பிலிருந்து- 1847 மார்ச் 21, ஸ்பெய்னிடமிருந்து அங்கீகாரம் 1850 மே 10.


**தேசிய பெயர்:** ரிபப்ளிகா டி கொஸ்டா ரிகா.


லாங்கெஸ்டர் தாவரவியல் பூங்கா



தேசிய இலச்சினை


ஜனாதிபதி


தலைநகரின் ஒரு பகுதி

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம் செப்டெம்பர் 15.

**ஜனாதிபதி** (2010): லோரா ச்சிஞ்சிலா.

**முதலாவது உப ஜனாதிபதி** (2010): அல்ஃபியோ பைவா.

**இரண்டாவது உப ஜனாதிபதி** (2010): லூயிஸ் லிபர்மேன்.

## புவியியல்

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான கொஸ்டா ரிகாவின் கிழக்கில் கரீபியன் கடலும் மேற்கில் பசுபிக் பெருங்கடலும் வடக்கில் நிகரகுவாவும் தென் கிழக்கில் பனாமாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் முக்கிய தரைத்தோற்ற அம்சமாக மலைத்தொடர்களும் அவற்றின் அடிவாரத்தில் பாரிய ஆற்றுப்பள்ளத் தாக்குகளும் காணப்படுகின்றன. வடக்கிலும் சென் ஜுவான் நதிக்கு இரு மருங்கிலும் பாரிய சமவெளிகள் காணப்படுகின்றன. மத்திய மலைச்சரிவுகளில் அடர்ந்த மழைக்காடுகள் காணப்படுகின்றன. இந்நாட்டில் பல குடாக்கள் காணப்படுவதோடு, டல்ஸி குடா, நிக்காயா குடா என்பன பெயர் பெற்றவை. மேற்குக் கடற்கரையோரத்தில் குன்றுகளும் மலைகளும் காணப்படுகின்றன. கொஸ்டா ரிகாவிலுள்ள ஆறுகளில் ச்சிரிப்பா, ஃபிரியோ, ஜெனரல், சென் ஜுவான், டெம்பிஸ்க்யூ என்பன குறிப்பிடத்தக்கவை.


முதலாவது உப ஜனாதிபதி




இரண்டாவது உப ஜனாதிபதி

**மொத்தப்பரப்பு:** 19,730 ச.மைல் (51,100 ச.கி. மீற்றர்).

**நிலப்பரப்பு:** 19,560 ச. மைல் (50,660 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 7 மாகாணங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** சென் ஜோஸ்.

**உயர் மலைச்சிகரம்:** ச்சிரிப்போ மலை (3810 மீற்றர்).

**தாழ்மையம்:** பசுபிக் கடல்.

**மக்கள் தொகை** (2010): 4,516, 220.

**நாணயம்:** கொலோன்.

**மொழிகள்:** ஸ்பெனிஷ் (உத்தியோகபூர்வமொழி), ஆங்கிலம்.


ரின் கொன் டி லா வீஜா எரிமலை


போ ஆஸ் எரிமலை கிடங்கு




**இனக்குழுவினர்கள்:** வெள்ளையர் (மெஸ்ட்டிஸோ உள்ளிட்ட) 94%, கறுப்பர்3%, அமெரிந்தியன் 1%, சீனர்1%, ஏனையோர் 1%.

**பிரதான சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 76%, ஆதிக் கிறிஸ்தவ சபை 14%.

**எழுத்தறிவு** (2006): 94.9%

**இணையத்தளக் குறியீடு:** .cr

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +506

**தேசிய கீதம்**

Noble patria, tu hermosa bandera
expresión de tu vida nos da;
bajo el límpido azul de tu cielo
blanca y pura descansa la paz....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

1502 இல் கிறிஸ்டோபர் கொலம்பஸினால் கொஸ்டா ரிகா கண்டுபிடிக்கப்பட்ட போது, 400,000 இந்தியர்கள் இப்பிராந்தியத்தில் வாழ்ந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1524 இல் இங்கு ஸ்பானியர் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1821 இல் ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரமடைந்தாலும் ஒகஸ்டின் டி இட்டுர்பிட் எனும் மெக்ஸிகன் சக்கரவர்த்தியின் ஆட்சியின்கீழ் இரண்டு வருடங்கள் இருந்தது. 1823 ஜூலை முதலாம் திகதி மெக்ஸிகன் சக்கராதிபத்தியத்திலிருந்து விடுதலை அடைந்து, மத்திய அமெரிக்க கூட்டமைப்பில் இணைந்தது. 1847 இல் அதிலிருந்து விலகி, 1848 இல் குடியரசாகியது. அதன்பின், 1870 முதல் 1882 வரை தோமஸ் கார்டியா என்பவரின் தலைமையிலான ராணுவ ஆட்சி நிலவியது.

1994 இல் ஜோஸ் மரியா ஃபிகரஸ் எனும் தேசிய விடுதலைக் கட்சியின் தலைவர் நாட்டின் முதலாவது ஜனாதிபதியானார்.

## கலாசாரம்

ஸ்பானிய கலாசாரத் தாக்கங்கள் மிக அதிகமாக உள்ள நாடுகளில் கொஸ்டா ரிகாவும் ஒன்று. ஸ்பானிய மொழி, மதம், இசை என்பனவற்றின் தாக்கத்தை கொஸ்டா ரிகா மக்களின் வாழ்க்கையில் அவதானிக்கலாம்.


கொஸ்டா ரிகா தேசிய நூதனசாலை

## காலநிலை

வெப்பவலய காலநிலையைக்கொண்ட கொஸ்டா ரிகாவில் வருடம் முழுவதும் இதமான காலநிலை நிலவுகின்றது. மார்ச் முதல் மே வரை அதிக வெப்பம் நிலவுகின்றது. டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் குளிர்மையான காலநிலை நிலவுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2002): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1.132 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிகள்: 528,047. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2002): AM 65, FM 51, SW 19.







**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 20. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 10,826; இணையத்தளப் பாவனையாளர்கள்: 800,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2004): மொத்தம் 278 கி.மீற்றர், **பெருந்தெருக்கள்** (2002): மொத்தம் 35 303 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2002): 730 கி. மீற்றர். **துறைமுகங்கள்:** கல்டேரா, பியூட்ரோ லைமன். **விமான நிலையங்கள்** (2004): 149.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 4%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, அன்னாசி, வாழை, கரும்பு, சோளம், நெல், பருப்பு வகைகள், அவரை வகைகள், கிழங்கு, மாட்டிறைச்சி, பெறுமதி மிகு மரங்கள்.

**கைத்தொழில்கள்:** உணவு உற்பத்திப் பொருட்கள், மென் மின்னியல் சாதனங்கள், புடவை, கட்டடப்பொருட்கள், உர வகைகள்.

**இயற்கை வளங்கள்:** நீர் மின்வலு.

**ஏற்றுமதிகள்** (2009): கோப்பி, வாழைப்பழம், சீனி, அன்னாசி, புடவை. **இறக்குமதிகள்** (2009): மூலப்பொருட்கள், நுகர்வுப் பொருட்கள், பெற்றோலியம், மூல உபகரணங்கள்.

**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, குவாதமாலா, ஜப்பான், மெக்ஸிகோ, பிரேசில்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- ரின்கொன் டி லா வீஜா எரிமலை
- கொஸ்டா ரிகா தேசிய நூதனசாலை
- போ ஆஸ் எரிமலை கிடங்கு
- ஆர்னல் எரிமலை மற்றும் வெந்நீர் ஊற்று.


கொஸ்டா ரிகா பல்கலைக்கழக நுழைவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்த்தினியின் அவதாரமும் மஹிஷனின் அழிவும்



ஒவ்வொரு வருடத்திலும் புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை முதல் நவமிவரை ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமே 'நவராத்திரி' விழாவாகும். இவ்விழா ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டு, பத்தாம் நாள் 'விஜயதசமி' எனக் கொண்டாடப்படுகின்றது. அதன்படி, இம்மாதம் 28 ஆம் திகதி நவராத்தி விழா ஆரம்பிக்கப்பட்டு, ஒக்டோபர் 7 ஆம் திகதி விஜயதசமியுடன் நிறைவு பெறுகின்றது. இந்த பூஜை ஸ்ரீ சக்தி தேவியை முழுமுதற் கடவுளாகக் கொண்டே அனுஷ்டிக்கப்படுகின்றது. முதல் மூன்று நாட்கள் ஸ்ரீ துர்க்கா தேவிக்கும் அடுத்த மூன்று நாட்கள் ஸ்ரீ லக்ஷ்மிதேவிக்கும் இறுதி மூன்று நாட்கள் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கும் என ஒன்பது நாட்கள் பூஜிக்கப்படுகின்றது

துர்க்காதேவி 'இச்சாசக்தி' எனவும் லக்ஷ்மிதேவி 'கிரியாசக்தி' எனவும் சரஸ்வதிதேவி 'ஞானசக்தி' எனவும் போற்றப்படுகின்றனர். இந்த மூன்று சக்திகளும் இணைந்த அவதாரமே 'சண்டிகாதேவி' அவதாரம் எனப்படுகின்றது. இந்த அவதாரத்தின் முக்கிய நோக்கம் மஹிஷன் எனும் அரக்கனை அழிப்பதேயாகும்.

## யார் இந்த மஹிஷன்?

ஒரு காலத்தில் ரம்பஹன், சுரம்பஹன் என்ற இரண்டு அரக்கர்கள் நீர்நிலையொன்றில் கடும் தவத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது தவத்தைக் கண்ணுற்று அதனைக் கலைக்க நினைத்த தேவேந்திரன் முதலை வடிவெடுத்து சுரம்பஹனைக் கொன்றுவிட்டான். இதனால், கடுங்கோபம் கொண்ட ரம்பஹன் தேவேந்திரனை அழித்தேயாக வேண்டும் என்றெண்ணி மீண்டும் தீவிரமாகக் கடுந்தவம் செய்தான். அவனது தவத்தைக்கண்டு மெச்சிய அக்னிபகவான் அவன் முன்னால் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, ரம்பஹனும் 'தனக்கு தேவர்களையும் சத்ருக்களையும் அழிப்பதற்கு மிகுந்த பலமும் சக்தியும் வேண்டும்' என்று கேட்டான். அக்னி பகவானும் அவன் கேட்டதை கொடுத்தருளினார்.

வரங்களைப் பெற்ற ரம்பஹன் காட்டு வழியே சென்றுகொண்டிருந்த போது, அங்கே ஓர் ஆண் எருமை, பெண் எருமையொன்றைக் கொல்வதற்காகப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த பெண் எருமையைக் காப்பற்ற எண்ணி இடையில் பாய்ந்த ரம்பஹன் எதிர்பாராமல் ஆண் எருமையால் கொல்லப்பட்டான். அவனது பரிதாப மரணத்தைக்கண்ட ராட்சதர்கள் அவனுக்கு மோட்சம் கிடைக்க வேண்டுமென்றெண்ணி, அவனது சிதைக்கு தீ வைத்தனர். அந்த தீயில் பெண் எருமை பாய்ந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டது. சிறிது நேரத்தின்பின் அந்த தீச்சுவாலையிலிருந்து மனித உடம்பும் எருமைத் தலையும் கொண்ட ஓர் உருவம் தோன்றியது. அவ்வாறு உருவமாக தோன்றியவன் 'மஹிஷன்' என அழைக்கப்பட்டான்.

புதிய உருவெடுத்த மஹிஷன் மீண்டும் கடுமையான தவத்தை மேற்கொண்டு, 'தனக்கு எந்த விதத்திலும் மரணம் ஒன்று நேரிடக் கூடாது என்றும் அவ்வாறு நேரின், அது ஒரு பெண்ணால் மட்டுமே நேரிட வேண்டும்' என்றும் பிரம்மதேவனிடம் வரத்தைப் பெற்றான். இத்தகைய வரத்தைப் பெற்ற அவன், இந்திரனோடு போர் புரிந்து இந்திரலோகத்தைக் கைப்பற்றினான். அவ்வாறே, வாயுமண்டலம், சந்திரமண்டலம், யமலோகம் என அனைத்து தேவலோகங்களையும் தன் ஆட்சியின்கீழ் அடிமைப்படுத்திக்கொண்டான். மஹிஷனின் அட்டூழியங்களைத் தாங்கமுடியாத தேவர்களும் ரிஷிகளும் பிரம்மதேவனிடம் சென்று முறையிட்டனர். அவனது அழிவுகாலம் நெருங்கிவிட்டதை பிரம்மதேவன் அவர்களுக்குத் தெளிவுறுத்தினார். இதனைக் கேள்வியுற்ற சிவபெருமானும் ஸ்ரீமன் நாராயணனும் கடும் கோபம் கொண்டனர். இக்கோபத்தின் உக்கிரத்தில் அகோர தீச்சுவாலை ஒன்று தோன்றியது. அந்த உக்கிரத் தீச்சுவாலையில் தோன்றியவள் தான் மஹிஷனை அழிக்க அவதரித்த 'சண்டிகாதேவி' ஆவாள்.

கடும் உக்கிரத்துடன் வெளிப்பட்ட சண்டிகாதேவியிடம் சிவன் தனது சூலாயுதத்தையும் ஸ்ரீமன் நாராயணன் தனது சக்ராயுதத்தையும் தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தையும் எமதர்மன் தனது தண்டாயுதத்தையும் வாயுதேவன் தனது வில், அம்புகளையும் பிரம்மா தன்னிடமுள்ள தூய ஆடைகளையும் சமுத்திரராஜா மலர் மாலையையும் இமையவன் தனது வாகனமான சிங்கத்தையும் அளித்து சண்டிகாதேவியை மஹிஷனுடனான யுத்தத்திற்குத் தயார்படுத்தினர்.

இருவருக்குமிடையில் கடுமையான போர் மூண்டது. மஹிஷன் தனது உருவை மாற்றி, மாற்றி மாயப் போர் புரிந்தான். இறுதியாக எருமைத் தலையுடன் கூடிய உடம்புடன் தோன்றினான். சண்டிகாதேவி அவன்மீது பாய்ந்து அவனது எருமைத் தலையை நசித்து அவன் மீது ஏறிநின்று மிதித்து வதம் செய்தாள். இதனைக்கண்ட அனைத்து தேவர்களும் ரிஷிகளும் பூமாரி பொழிந்தனர். திருமூர்த்திகள் மலர் தூவி ஆசீர்வதித்தனர். மஹிஷனை அழித்ததனாலேயே 'மஹிஷாசுரமர்த்தினி' என அழைக்கப்பட்டாள். எட்டு நாட்கள் போர் புரிந்து ஒன்பதாம் நாள் மஹிஷனை வதம் செய்து புதிதாக அவதாரமெடுத்த மஹிஷாசுரமர்த்தினிக்காக அனுஷ்டிக்கப்படும் விரதமே 'நவராத்திரி விழா' ஆகும். இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூஜை செய்து கொண்டாடியமையால் பத்தாவது நாள் 'விஜயதசமி' எனவும் கூறப்படுகின்றது.








## விஜயதசமி

இந்நாளில் துர் சக்திகள் அழிந்து, தூய சிந்தனைகள், புதிய எண்ணங்கள் உருவாகித் துணிவும் ஆற்றலும் கிடைக்க வேண்டும் என்பதே இத்தின வழிபாட்டின் நோக்கமாகும். விஜயதசமி என்றால் 'வெற்றி தருகிற நாள்' என்று பொருள். ஆகையால், இந்நன்நாளில் குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து வைப்பது, அனைத்து நற்காரியங்களையும் ஆரம்பிப்பது போன்ற நல்ல பல நிகழ்வுகள் தொன்று தொட்டு நம்மிடையே நிலவி வருகின்றது.

## கொலு வைத்தல்

'ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணால் ஆன பொம்மையினால் என்னைப் பூஜித்தால் நான் உங்களுக்கு சகல சுகங்களையும் சௌபாக்கியங்களையும் அருளுவேன்' என்கிறாள் அம்பிகைதேவி. இதனால் தான் நவராத்திரியில் கொலு வைத்து அம்மனை பூஜிக்கின்றோம். மேலும், நவராத்திரி கொலு வைப்பதன் தத்துவம், மனிதன் எவ்வகையிலேனும் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதாகும். ஆன்மா ரீதியாக மனிதன் படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று இறுதியில் இறைவனில் கலக்க வேண்டும். இதுவே மனிதப் பிறப்பின் தத்துவம். இதனை விளக்கும்பொருட்டே கொலுக்காட்சியில் ஒன்பது படிகள் வைத்து அதில் பொம்மைகளை அடுக்கி வழிபடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ............................................ நேரம்: 45 நிமிடங்கள்

20) பின்வரும் எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும்போது  எனத் தோன்றும்?



1. 2. 3.

21) தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது, கிடைக்கும் உருவைத் தெரிவுசெய்க.



1. 2. 3.

22) இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு யாது?



1. 2. 3.

★ *2011 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். இதற்கேற்ப; 23 ஆம், 24 ஆம் வினாக்களுக்குரிய விடையை தெரிவுசெய்க.*


23) 2011 ஜனவரி மாதத்தில் உள்ள சனிக்கிழமைகளின் எண்ணிக்கையும் ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே;

1. 5,5 2. 4,5 3. 5,4

24) 2011 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை சனிக்கிழமைகள் உள்ளன?

1. 54 2. 53 3. 52

25) இலங்கை, மேல் மாகாணம், கொழும்பு என்பனவற்றிற்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. அதில் 'A' இனால் காட்டப்படுவது;




1. மேல் மாகாணம்
2. இலங்கை
3. கொழும்பு

★ *பந்தியை வாசித்து 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*

> மாமா எங்களுக்கு பந்துகள் வாங்கி வந்தார். நான் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரன் நீலம், பச்சை, வெள்ளை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரி ஊதா, நீலம், பச்சை ஆகிய பந்துகளையும் எடுத்துக்கொண்டோம்.

26) நாங்கள் மூவரும் பெற்ற நிறப்பந்துகள் யாவை?

1. ஊதாவும் நீலமும் 2. சிவப்பும் பச்சையும் 3. நீலமும் பச்சையும்

27) சகோதரி மாத்திரம் பெற்ற நிறப்பந்து எது?

1. வெள்ளை 2. ஊதா 3. சிவப்பு

28) குகன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது, 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும் அவன் அந்த நிகழ்ச்சியில் வெற்றிபெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;

1. விளையாட்டு மைதானம் வேறுபட்டமை.
2. உணவு உண்ணாமல் பங்கு பற்றியமை.
3. குகனைவிட மிக வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை.

29) 400 இன் அரைவாசியின் 1/4 உடன் 15 ஐக் கூட்டும்போது, கிடைக்கும் எண் யாது?

1. 55 2. 65 3. 45

30) 41 தொடக்கம் 46 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 6 3. 5

31) இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 20 ஆம் திகதி. சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

1. 12 ஆம் திகதி 2. 11 ஆம் திகதி 3. 18 ஆம் திகதி

32) ஒரு மணித்தியாலத்தில் 10 தொப்பிகள் தைக்கும் தொழிலாளி 90 நிமிடங்களில் எத்தனை தொப்பிகள் தைப்பான்?

1. 25 2. 20 3. 15





33) பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 45 இலிருந்து 55 வரையிலான எண்கள் பொறிக்கப்பட்ட மேலங்கியுடன் விளையாட்டு வீரர்கள் நின்றனர். மைதானத்தில் நின்ற விளையாட்டு வீரர்கள் எத்தனை பேர்?

1. 11 2. 10 3. 12

34)  அன்னாசிப்பழம், உணவு, பழங்கள் ஆகிய மூன்றுக்கும் இடையிலான தொடர்பைக் காட்ட இவ்வுரு வரையப்பட்டுள்ளது. இதில் △ இனால் காட்டப்படுவது எது?

1. உணவு 2. அன்னாசிப்பழம் 3. பழங்கள்

35) குங்குமம் என்னும் சொல்லைக் குறிக்கும் குறியீட்டு வடிவினைத் தெரிவுசெய்க.



36)  என்னும் குறியீடு குறிக்கும் சொல் எது?

1. வடிவம் 2. கம்பம் 3. சங்கம்

37) கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.




1. 2. 3.

38) □ = △△ எனின் △□ =? வெற்றிடத்திற்குப் (?) பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. □□ 2. △△ 3. △△△

★ *அருகே காணப்படும் உருவை அவதானித்து, 39 முதல் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*




39) சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது? ......................

40) வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றிற்கும் பொதுவான இலக்கம் எது? ..................

### வினாத்தாள் - I இற்கான விடைகள்

*(செப்டெம்பர் 21, 28 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 2 | 21. 2 | 31. 2 |
| 02. 3 | 12. 3 | 22. 3 | 32. 3 |
| 03. 3 | 13. 2 | 23. 1 | 33. 1 |
| 04. 2 | 14. 2 | 24. 2 | 34. 2 |
| 05. 2 | 15. 3 | 25. 3 | 35. 3 |
| 06. 3 | 16. 3 | 26. 3 | 36. 3 |
| 07. 2 | 17. 2 | 27. 2 | 37. 2 |
| 08. 2 | 18. 3 | 28. 3 | 38. 3 |
| 09. 2 | 19. 3 | 29. 2 | 39. 7 |
| 10. 3 | 20. 1 | 30. 1 | 40. 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போக்குவரத்துத்துறை வரலாறு





**பண்டையகாலத்தில் வாழ்ந்த மக்கள் பயணங்களை மேற்கொள்ளவும் பொருட்களை எடுத்துச் செல்லவும் பலதரப்பட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றினர். ஆரம்பத்தில் விலங்குகள்மீது பயணிக்கத் தொடங்கிய மக்கள், பின்னர் பாரமான பொருட்களை இழுத்துச் செல்லவும் விலங்குகளைப் பயன்படுத்திக்கொண்டனர். மாட்டுவண்டி, இழுவை வண்டிகள் என்பன இவ்வாறே அறிமுகமாகின**



சாதாரண பொதுமக்கள் தோளில் சுமைகளை சுமந்து நடந்து செல்லும்போது, அரசர்கள் உள்ளிட்ட செல்வந்தப் பிரபுக்கள் பல்லக்கிலும் கதிரைபோன்று அமைந்த பல்லக்கிலும் போக்குவரத்தை மேற்கொண்டனர். இதன் பின்னர் ரிக்ஷா, ட்ரேம் வண்டி என்பன பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டாலும் குறிப்பிட்ட சில காலத்திற்குப் பின்னர் அவை படிப்படியாக பெருந்தெருப் போக்குவரத்தில் இருந்து விலக்கப்பட்டன. அதன்பின்னர் தரைப்போக்குவரத்தில் புகைவண்டி, பஸ் வண்டி, சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியன பிரபல்யம் அடைந்தன.

## நடைப்பயணம்

பண்டையகாலத்தில் மக்கள் கால்நடையாகவே பயணங்களை மேற்கொண்டனர். போக்குவரத்து வசதிகள் அற்ற அன்றைய காலத்தில் மக்கள் பல மணித்தியாலங்கள், நாட்கள் நடந்துசென்று தமது இலக்குகளை அடைந்தனர்.

தூதர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்திகள் மற்றும் தகவல்களை எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்குப் பல மாதங்கள் நடந்தே சென்றிருக்கின்றனர். அவ்வாறே, போர்க்காலங்களில் ஏற்படும் உயிர் இழப்புகள் குறித்தான தகவல்களும் கால்நடையாகச் சென்றே வழங்கப்பட்டன. இதனால், போரின்போது உயிரிழந்தவர்களின் தகவல்கள் அவர்களின் உறவினர்களுக்கு பல மாதங்கள் கடந்தே அறியக்கிடைத்தன.

பண்டையகாலத்தில் அரசர்கள், சிற்றரசர்கள் ஆகியோரும் கால்நடையாகவும் பிரயாணங்களை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, இலங்கையில் முதல் குடியேற்றத்தை நிறுவிய விஜயனும் அவனது தோழர்களும் இரண்டாவதாகக் குடியேற்றங்களை அமைத்த பண்டுவாசுதேவ அரசனும் அவனது பிரிவினரும் கரையோரப் பகுதியூடாக, நாட்டை வந்தடைந்து நாட்டிற்குள் பிரவேசித்தது நடைப்பயணத்தின் ஊடாகவே ஆகும்.

## பல்லக்கு

அநுராதபுர காலப்பகுதியில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் முதல் கட்டம் வரை போக்குவரத்துக்கெனப் பல்லக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அரசர்கள், அமைச்சர்கள் உட்பட, அரச செல்வந்தக் குடும்பத்தினரே பல்லக்கில் பயணம்செய்யும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இந்தியாவில் இருந்தே இலங்கைக்கு பல்லக்குகள் முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டன.

பல்லக்கின் வடிவமைப்பு அதில் பயணம் செய்யும் செல்வந்தர்களின் அந்தஸ்திற்கேற்ப அமைந்திருக்கும். அரசனின் பல்லக்கு தங்கத்தினால் வேலைப்பாடுகள் செய்யப்பட்டதாக அமைந்திருக்கும். அரசிக்கு என்று வேறு விதத்திலான பல்லக்கு இருந்தது. பிக்குகளுக்கென வேறுபட்ட விதத்திலான பல்லக்குகள் இருந்தன. இவற்றைத் தவிர, கடவுள்களின் ஆபரணங்களை சுமந்து செல்லவென தங்கப்பல்லக்குகள் பயன்படுத்தப்பட்டன. பல்லக்குகளை சுமந்து செல்லும் பணியில் பொதுமக்களே ஈடுபடுத்தப்பட்டனர். அரசர்கள் பல்லக்கில் பயணம் செய்யும்போது, நால்வர் பல்லக்கைத் தூக்கிச் செல்வார்கள். அதேவேளை, இன்னுமொருவர் அரசனுக்குக் குடைபிடித்துச் செல்வார். இதற்காக முத்துக்களால் வேயப்பட்ட விசேட குடைகள் பயன்படுத்தப்பட்டன. மன்னராட்சிக் காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த பல்லக்குப் பயணம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்துடன் நிறைவுக்கு வந்தது.

## கதிரைப் பல்லக்கு எனும் டொம் ஜோன் வாகனம்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தனிநபரின் பயன்பாட்டிற்கென பயன்படுத்தப்பட்ட பல்லக்குப் போன்ற அமைப்பினைக்கொண்ட ஒரு வாகனமாக கதிரைப் பல்லக்கைக் குறிப்பிடலாம். இதனை 'டொம் ஜோன் வாகனம்' என்றும் கூறுவர். இது கதிரையைப் போன்றிருக்கும். இந்த கதிரை மிகவும் சொகுசானது. அதன்மீது மறைப்பு ஒன்று போடப்பட்டிருக்கும்.

இந்தக் கதிரை மூங்கில் கம்பங்கள் இரண்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதனை இரண்டு பேர் தமது தோள்களில் சுமந்து செல்வர். பிரித்தானியர் ஆட்சியின்போது, ஆளுநர்கள் போக்குவரத்து செய்ய இந்த வாகனத்தைப் பயன்படுத்தியதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(12,13ஆம் பக்கங்களைப் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போக்குவரத்துத்துறை வரலா

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## விலங்குகள் மீதேறி பயணித்தல்



மாடுகள், எருதுகள், கழுதைகள், குதிரைகள், ஒட்டகங்கள் போன்ற விலங்குகள் முற்காலத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளில் மனிதர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய விலங்குகளாக இருந்தன. இந்த விலங்குகளில் சிலவற்றை உணவுக்காகவும் உணவு சார்ந்த தேவைகளுக்காகவும் வளர்த்து வந்த மக்கள், பிற்காலத்தில் தமது அன்றாட செயற்பாடுகளுக்காகவும் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டனர். விவசாயத்துறையிலும் இந்த விலங்குகள் பயன் மிக்கதாக விளங்கின. தமது விளைச்சல்களையும் ஏனைய பண்டங்களையும் மூடையாகக் கட்டி எடுத்துச்செல்ல இந்தகைய விலங்குகள் உதவின.

நாளடைவில் அரச பரம்பரையினரும் விலங்குகள் மீதேறி போக்குவரத்து செய்யும் முறையினைக் கடைப்பிடிக்கலாயினர். குறிப்பாக, அரசர்கள் குதிரைப்படை, யானைப்படை என்பனவற்றை தமது பாவனைக்காக அமைத்துக்கொண்டனர். இதனை அடுத்து, இந்தியாவின் சிந்து மாநிலத்தில் இருந்து இலங்கைக்கு குதிரைகள் கொண்டு வரப்பட்டன. அதன் அடிப்படையிலேயே, இலங்கையில் தற்போது கூட, விசேட நிகழ்வுகளின் போது, யானைகள் மற்றும் குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன. அரச நிகழ்வுகள் மற்றும் ராஜ மரியாதைகளின் போது, குதிரை மீதேறி அணிவகுத்துச் செல்லும் முறையும் பின்பற்றப்படுகின்றது.

## வண்டி



குதிரை மீது அல்லது யானை மீதேறி சவாரி செய்வதற்குப் பதிலாக, மிருகங்கள் ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் முறை பிற்காலத்தில் பயன்பாட்டிற்கு வந்தது. இந்த வண்டிகளில் வட்ட வடிவத்திலான இரண்டு சக்கரங்கள் பொருத்தப்பட்டன. குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் வண்டிகளே முதலில் அறிமுகமாகின. பின்னர் மாடுகளால் இழுத்துச் செல்லப்படும் வண்டிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வகையான வண்டிகள் பல்வேறு தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டிருந்தன. பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான வண்டிகள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கான வண்டிகள், செல்வந்தர்கள் பயணிப்பதற்கான வண்டிகள் என அவை வெவ்வேறு ரகங்களில் காணப்பட்டன.

தென்னிந்தியாவின் மதுராபுரியை ஆட்சிசெய்த பாண்டிய மன்னனின் புதல்வியை அப்போது இலங்கை மன்னனாக இருந்த விஜயனுக்கு திருமணம் செய்து வைத்தல் தொடர்பான சம்பவத்தின்போதே, இலங்கையில் வண்டிகளின் அறிமுகம் இடம்பெற்றுள்ளது. இதன் பின்னரே, வண்டிகளின் பாவனை முன்னேற்ற நிலையை அடைந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் விதம் விதமான வண்டிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டன. விழாக்களின்போது, பல்வேறு விதமான அலங்கரிக்கப்பட்ட வண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## தபால் வண்டி எனப்படும் குதிரை வண்டி



தபால் விநியோகத்திற்காகவும் மக்கள் போக்குவரத்திற்காகவும் என 1832 இல் தபால் வண்டி எனும் குதிரை வண்டிச் சேவை இலங்கையில் ஆரம்பமானது. அதன்படி, கண்டிக்கும் கொழும்புக்கும் இடையிலேயே முதலாவது தபால் வண்டிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவிலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட தபால் வண்டிச் சேவையும் இதுவாகும். நான்கு சக்கரங்களைக் கொண்டிருந்த இந்த வண்டியை இரண்டு குதிரைகள் இழுத்துச் சென்றன. இதன் உட்பகுதியில் ஆறு பயணிகள் அமர்ந்து பயணிக்க முடியும். ஆசனங்கள் தும்புகளினால் அமைக்கப்பட்டிருந்தன.

மேலும், கூடாரம் போன்றதோர் அமைப்பும் இதில் காணப்பட்டது. இது வெயில், மழையிலிருந்து தற்காத்துக்கொள்ள உபயோகமாக இருந்தது. காற்றோட்டத்திற்காக அதன் திரைச்சீலைகளை உயர்த்திக்கொள்ளும் வசதியும் இருந்தது. வண்டிச் சாரதியின் ஆசனம் முன்பகுதியில் இருந்தது. அத்துடன், பொருட்களை ஏற்றிச்செல்லும் வசதியும் இங்கு காணப்பட்டது. இலங்கையில் ரயில் பாதைகள் அமைப்பு, மோட்டார் வாகனங்கள் வருகை என்பன இந்த தபால் வண்டிகளின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன.

## ட்ரேம் வண்டி

1900 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் ட்ரேம் வண்டிச் சேவை ஆரம்பமானது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினாலேயே ட்ரேம் வண்டிச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. மின்சார ட்ரேம் வண்டிகளின் வினைத்திறன் மிக்க சேவையின் காரணமாக, பயணிகள் போக்குவரத்தில் ட்ரேம் வண்டிகள் பிரபல்யம் பெற்றிருந்தன.





ட்ரேம் வண்டி பயணிப்பதற்கு 7 மைல் நீளமுடைய சமாந்தரமான இரட்டை ஓடுபாதை தேவையாக இருந்தது. எனினும், இலங்கையைப் பொறுத்தவரையில், கொழும்பில் சனநெரிசல் அதிகம்கொண்ட பகுதிகள் மற்றும் வர்த்தக சந்தைப் பகுதிகளில் மட்டுமே ட்ரேம் வண்டிச் சேவைகள் அமுலில் இருந்தன. இதற்கான ஓடுபாதைகள் களனி கங்கை கரைப்பகுதியில் இருந்து கோட்டை வரையும் அங்கிருந்து பொரளை வரையும் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. இதனால், ட்ரேம் வண்டியின் பயன்பாட்டினை குறித்த பகுதிகளில் வாழ்ந்த மக்களால் மட்டுமே அனுபவிக்க முடிந்தது.

## ரிக்ஷா வண்டி

'வீபோல்' நிறுவனம் 1883 இல் முதன்முதல் ரிக்ஷா வண்டியை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது. இவை அறிமுகமான புதிதில் பல ரிக்ஷா வண்டிகளைத் தம்வசம் வைத்திருப்பதானது, தமது அந்தஸ்தை உயர்த்திக் காட்டும் எனக் கருதிய செல்வந்தர்கள், இத்தகைய வண்டிகளை கொள்வனவு செய்யப் போட்டியிட்டனர். ஆரம்பகாலத்தில் ரிக்ஷா வண்டி அலங்கரிக்கப்பட்ட வாகனமாகத் திகழ்ந்தது. அத்துடன், ரிக்ஷாவை இழுத்துச் செல்லும் மனிதனும் தம்மை நன்கு அலங்கரித்துக்கொண்டவனாக இருந்தான்.


வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ரிக்ஷா வண்டிகள் அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவையாகக் காணப்பட்டன. எனினும், காலப்போக்கில் உள்ளூர் தொழிற்சாலைகளிலும் ரிக்ஷா வண்டிகள் உற்பத்தி செய்யப்படலாயின. அன்று இந்த வண்டிகளை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளவும் முடிந்தது. பயணத்தை மேற்கொள்ள செலவாகும் நேரத்திற்கேற்ப ரிக்ஷா கட்டணங்கள் அறவிடப்பட்டன. இலங்கையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதியுடன் ரிக்ஷா வண்டிகள் பாவனையில் இருந்து விலக்கப்பட்டன. மேலும், வசதியாக அமர்ந்திருக்கும் ஒரு மனிதனை சக மனிதன் இழுத்துச் செல்வது மனித அடிமைச் செயலாகும் என்ற கருத்து நிலவியமையாலும் ரிக்ஷா வண்டிகளின் பாவனை குறைவடைந்தது.





1896 ஆம் ஆண்டிலிருந்து பயணிகள் போக்குவரத்துக்கென இலங்கையில் மிதிவண்டிப் பாவனை ஆரம்பமாகியது. கிராமம் உள்ளிட்ட

## மோட்டார்



இளைஞர்களால் மிகவும் விரும்பப்படும் ஆரம்பகாலங்களில் இலங்கையில் மோட் இருக்கவில்லை. லண்டனில் உள்ள வரையறுக்கப்பட்ட வோக்கர் நிறுவனத்திலிருந்து 1903 ஆம் ஆண்டுதான் முதன்முதலில் மோட்டார் சைக்கிள்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. தற்போது இலங்கையில் மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனங்கள் பலவும் உள்ளன. தற்போதளவில் இலங்கையில் பலதரப்பட்ட மோட்டார் சை



## மோட்டார்



மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் 1899 ஆம் ஆண்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன. இந்த உதிரிப்பாகங்கள் அரச தொழிற்சாலையொன்றில் பொருத்தப்பட்டு மோட்டார் வாகனங்கள் ஓட்டிச் செல்லப்பட்டன. இவ்வாறு முதலில் செலுத்தப்பட்ட மோட்டார் வாகனம் நீராவியில் இயங்கக்கூடிய வாகனமாகக் காணப்பட்டது. எரிபொருளினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவண்டி



பின்தங்கிய பகுதிகளில் சவாரி செய்யக்கூடியவாறும் எளிய பயன்பாடு மற்றும் எரிபொருள் செலவின்மை ஆகிய காரணங்களினாலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இளைஞர்கள் மத்தியில் சைக்கிள் பிரபல்யம் பெற்று விளங்கியது. காலப்போக்கில் இளைஞர்கள் மட்டுமன்றி, ஏனையோரும் மிதிவண்டிகளைப் பயன்படுத்தலாயினர். பண்டங்களை எடுத்துச் செல்லல், தொழிலுக்குப் புறப்படல் உட்பட, பல்வேறு தேவைகளுக்காக மிதிவண்டிகள் பயன்பட்டன.

## ...டார் சைக்கிள்



...ப்படும் வாகனங்களில் ஒன்றாகும்.
...மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனங்கள்



...டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளன.

## ...ார் வாகனம்



இயங்கக்கூடிய மோட்டார் வாகனமொன்று 1902 ஆம் ஆண்டிலேயே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டது. அது ஓல்வஸ் மொபில் ரகத்தினை சேர்ந்த மோட்டார் வாகனமாகும். ஐந்து குதிரை வலு என்ஜின் கொண்ட வாகனமாக இது காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இலங்கையில் மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரிக்க ஆரம்பித்தமையினால், 1928 இல் வாகனங்களைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பமாகின.

## பஸ் வண்டி




1907 ஆம் ஆண்டில் இலங்கையில் முதன்முதலாக பஸ் வண்டிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, கொழும்புக்கும் சிலாபத்திற்கும் இடையிலேயே முதலாவது பஸ் சேவை ஆரம்பமானது. பின்னர் இந்த சேவை காலி, திருகோணமலை, பதுளை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தனியார் நிறுவனம் ஒன்றே இச்சேவைகளை நடாத்தி வந்தது.

## முச்சக்கர வண்டி



மூவர் இலகுவாகப் பயணம் செய்யக்கூடிய வகையில் அமைந்த வாகனமாகும். இது அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது பரவலாகப் பாவனையில் உள்ளது. தனியார் பாவனை, வீட்டுப்பாவனை, நிறுவனங்களின் பாவனை என பல்வேறு தேவைகளின் நிமித்தம் முச்சக்கர வண்டிகள் பயன்பாட்டில் உள்ளன.

# பண்டையகால பண்டப் போக்குவரத்து முறைகள்



## கூடைகள், பெட்டிகள் மூடைகள்


சிறிய பொருட்களை எடுத்துச் செல்வதற்காக பன்புற்களால் பின்னப்பட்ட மூடைகள் பயன்படுத்தப்பட்டன. பொருள் நிறைந்த மூடைகளை தோளில் சுமந்து சென்றனர். அத்துடன், பெட்டிகள், கூடைகளில் வைத்தும் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இதனால், பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைவடைந்தன. பெட்டிகள், கூடைகள் என்பன பிரம்பினாலேயே வேயப்பட்டிருந்தன. இது தவிர பொருட்களை எடுத்துச் செல்ல விலங்குகளும் பயன்படுத்தப்பட்டன.



## மரக்கம்பம்


வளையும் தன்மைகொண்ட நீண்ட மரக்கம்பத்தின் இரண்டு முனைகளிலும் பிரம்பினால் பின்னப்பட்ட இரண்டு தட்டுக்கள் கயிற்றினால் கட்டப்பட்டு தொங்கவிடப்படும். அதில் பொருட்களை வைத்து மரக்கம்பத்தின் நடுப்பகுதியை தோளில் வைத்து காவிச் செல்லப்படுகின்றது.

மீன்வகைகள், கீரைவகைகள், காய்கறிகள் என்பனவற்றை விற்பனை செய்ய பண்டையகாலம் முதல் இம்முறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இவற்றைத் தவிர கட்டில்கள், கதிரைகள் தளபாடங்கள் என்பனவும் இத்தகைய முறையில் விற்பனை செய்யப்பட்டன.



## மாட்டுவண்டி

பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மாட்டுவண்டிகளும் பயன்பட்டுள்ளன. மாடுகளும் எருதுகளுமே இந்த வண்டியை இழுத்துச் சென்றன.வண்டிகளில் ஏற்றிச்செல்லப்படும் பொருட்களின் அளவிற்கேற்ப மாடுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.



(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12,13ஆம் பக்கங்களின் தொடர்ச்சி)


# இலங்கையின் போக்குவரத்துத்துறை வரலாறு




## சூரியனின் அகச்சிவப்புக் கதிர்களில் இருந்து மின்சாரம்!

சூரியனில் இருந்து வெளிப்படும் அகச்சிவப்புக் கதிர்களில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான புதுவழியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பான ஆய்வை அமெரிக்காவின் ரைஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆய்வாளர்களில் ஒருவரான, மின்னியல் மற்றும் கணினிப் பொறியியல் பேராசிரியர் நவோமி ஹாலாஸ் இதுபற்றிக் கூறுகையில், ''தற்போது சூரியசக்தி மின்சார உற்பத்திக்காகப் பயன்படும் சிலிக்கன் தகடுகளில் அகச்சிவப்புக் கதிர்களைக் கண்டறிந்து ஈர்ப்பதற்கான வழிமுறை இல்லை.எனவே, நாங்கள் அதில் நெனோ என்டெனாக்களை செமிகண்டக்டர் ஸ¬டன் இணைத்து அகச்சிவப்புக் கதிர்களில் இருந்து மின்சாரம் தயாரிக்க வழியமைத்திருக்கிறோம். இதன்மூலம், அதிக திறன் வாய்ந்த சூரியசக்தித் தகடுகளை உருவாக்கலாம்'' என்றார்.



பூமிக்கு வரும் சூரியசக்தியில் மூன்றில் ஒரு பங்கு, அகச்சிவப்புக் கதிர்களாகும். ஆனால், இன்று பெரும்பாலான சூரியசக்தித் தகடுகளில் பயன்படுத்தப்படும் பொருளான சிலிக்கனால் அகச்சிவப்புக் கதிர்களின் சக்தியை ஈர்க்க முடிவதில்லை. எனவே, அகச்சிவப்புக் கதிர்கள் போன்ற குறிப்பிட்ட அலை நீளத்துக்குக் குறைவாக உள்ள வெளிச்சக்கதிர்கள், மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படாமல் சாதாரண சூரியசக்தித் தகடுகளைக் கடந்து சென்றுவிடுகின்றன. அந்த நிலையைத் தங்களது கண்டுபிடிப்பு மாற்றுகிறது என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.





அகச்சிவப்புக் கதிர்களின் ஈர்க்கக்கூடிய சூரியத்தகடு வடிவமைப்பின்போது....

தமது கண்டுபிடிப்பின்மூலம் அதிக திறன் வாய்ந்த சூரியசக்தித் தகடுகளை பெருமளவில் உற்பத்தி செய்யமுடியும் என்றும் அவற்றின் மூலமாக, அதிக அளவில் சூரியசக்தி மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்றும் இந்த ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இது தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

## பண்டங்கள், பயணிகள் போக்குவரத்து

புகைவண்டியானது, பயணிகள் போக்குவரத்திற்கும் பண்டப் போக்குவரத்திற்கும் அன்றிலிருந்து இன்றுவரை உதவும் சாதனமாக திகழ்கின்றது. இவ்விரு போக்குவரத்து முறைகளுக்கும் என தனித்தனி புகைவண்டிகளும் உண்டு. இன்று அலுவலக ஊழியர்கள் மத்தியில் புகைவண்டி சேவைகள் பிரபல்யம் அடைந்துள்ளன. போக்குவரத்து நெரிசலின்றி விரைவாக பயணம் செய்யக்கூடியதாக இருப்பதே இதன் பிரபல்யத்திற்கான காரணமாகும்.

முதலாவது புகைவண்டி எஞ்ஜின் நீராவியினாலேயே இயங்கியது. நீராவி எஞ்ஜின் பொருத்தப்பட்ட முதலாவது புகைவண்டி இலங்கையில் 1864 டிசம்பர் 27 ஆம் திகதி இயங்கியமை குறிப்பிடத்தக்கது. இந்த புகைவண்டி இயங்குவதற்கான நீராவியானது நிலக்கரியை எரிப்பதன் மூலமே பெறப்பட்டிருந்தது. எரிபொருளில் இயங்கக்கூடிய புகையிரத எஞ்ஜின் தயாரிக்கப்பட்டதன் பின்னரே இலங்கையில் புகையிரதப் பயணம் வளர்ச்சி கண்டது.

## லொறிகள், டிப்பர், டிரக்டர் மற்றும் ட்ரேலர்



பொருட்களையும் பண்டங்களையும் எடுத்துச் செல்வதற்காக நவீன காலத்தில் லொறிகள், டிப்பர், டிரக்டர் மற்றும் ட்ரேலர் போன்ற வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை நான்கு சக்கரங்களைக் கொண்டதாகவும் ஆறு சக்கரங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. நான்கு சக்கர வாகனங்களில் ஏற்றக்கூடிய அதிகபட்ச நிறை 6 தொன்கள். ஆறு சக்கர வாகனத்தில் இதனைவிட அதிகமான நிறையினை ஏற்றமுடியும். 1930 இல் இலங்கையில் காணப்பட்ட லொறிகளின் எண்ணிக்கை 3,000. தற்போது இந்த எண்ணிக்கை பன்மடங்காகியிருக்கின்றது.

-(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக் களைப் பயன்படுத்தி, குறைந்தது 10 சொற்களை யேனும் அமையுங்கள். **4**










அற்லஸ் அறிவுக்கு விருந்து 332
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## எத்தனை உள்ளன? **1**



## நிறந்தீட்டப்பட்டுள்ள உருவத்தை ஒத்திருக்கும் உருவை இனங்கண்டு நிறம் தீட்டுக **3**



## பொருத்தமான மரபுத்தொடரின்கீழ்க் கோடிடுக **5**

1. ஆராய்தல்- (ஆறப்போடுதல்/ ஆழம்பார்த்தல்)
2. செலவாளி - (ஓட்டைக்கை/ ஓட்டைவாய்)
3. அகந்தை - (தலைதூக்குதல்/தலைவீக்கம்)
4. கேட்டல் - (செவிப்படுதல்/செவிமடுத்தல்)
5. பின்பற்றுதல் - (அடியிடல்/அடியொற்றுதல்)

## ஒரே மாதிரியான உருவுடன் இணைக்க **2**



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 329 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
என்.நௌஷாத், பிரதான வீதி, ஹல்துமுள்ள.

**போட்டி: 02**
மு.தக்ஷலா, சுதுஹும்பொல வீதி, கண்டி.

**போட்டி: 03**
எஃப்.ஹஸன்ஹி,
பாண்டியன் குளம், நாச்சியாதீவு.

**போட்டி: 04**
அனாம் மஹ்தி, பெரிய பாலத்தடி வீதி, ஏறாவூர்.

**போட்டி: 05**
கு.ஒலிவ்யா, குடாகம, ஹட்டன்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ ரிமாஸ் முஸம்மில், கஹவத்தை.
- ★ வி.மோனிஷா, இறக்குவானை.
- ★ சஹ்மி யூசுப், ஏறாவூர்.
- ★ எம். அஷ்பாக், கெலிஓயா.
- ★ பி.யசோதரன், ஹன்கரனோயா.
- ★ எம்.ரஷாத், மள்வானை.
- ★ ந.பத்மபிரியன், யாழ்ப்பாணம்.
- ★ எஃப்.ஹஸ்னா, ஹக்காப்பொல.
- ★ பி.அஜித்கர், மாறஸ்ஸன.
- ★ எம்.லுக்ஷி, கைக்காலளை.

## அறிவுக்கு விருந்து 329 விடைகள்

**போட்டி: 01**

1. கதி - நிர்க்கதி
2. இலாபம் - நட்டம்
3. குறை - நிறை
4. வன்மை - மென்மை
5. சிறுமை - பெருமை

**போட்டி: 02**
மூன்று பறவைகள்

**போட்டி: 04**




# விஜய் வாசகர் மடல்




**வி**ஜய்யே! எமக்காக நீ ஆற்றும் சேவைகள் அளப்பரியன. 'இராமாயணம்', 'பலே பலே வைத்தியர்', 'வாரம் ஒரு நாடு', 'தெரிந்துகொள்வோம்' போன்ற தொடர் ஆக்கங்கள் என்னைக் கவர்ந்தவை. **-அஸ்கா ஷெரீன், அக்குறனை முஸ்லிம் பா.ம.வித்., அக்குறனை.**

**வா**ராந்தம் நீ சுமந்துவரும் 'புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாள்' என் போன்ற மாணவர்களுக்கு பெரிதும் உதவுகின்றது. ஒவ்வொரு வருடமும் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு நீ ஒரு வரப்பிரசாதம். வாழ்க உன் பணி! வளர்க உன் சேவை!. **-அப்துல்லாஹ் அஷ்ரப், நாகலகமுவ ஆமினா மு.வித்., கொஹிலேகெதர.**

**எ**ன்னைப்போன்ற பல ஆயிரம் மாணவர்களின் கல்விக்கு கைகொடுப்பதோடு, ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் ஆசான் நீயே! பாடசாலையில்கூட, அறிந்துகொள்ள முடியாத தகவல்களைத் தாங்கி வந்து எமது அறிவைப் போஷிக்கின்றாய். அரசியல், விளையாட்டு, போட்டிகள், கதைகள் என பலதரப்பட்ட விடயங்களை ஒருங்கே தாங்கிவரும் விஜய்யே! நீ மென்மேலும் வளர வாழ்த்துகிறேன். **-டி.பவதாரணி, குருந்துவத்த ரோயல் கல்லூரி, கம்பளை.**



**நீ** தாங்கி வரும் ஒவ்வொரு ஆக்கமும் எமக்குப் பயன்தருகின்றது. குறிப்பாக, புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளைப் பிரசுரித்து வரும் உனது சேவை மகத்தானது. 'தெரிந்துகொள்வோம்', 'விண்வெளித் தகவல்கள்' என்பன அருமை. அதில், 'நெப்டியூன் கிரகம்' பற்றிய தகவல் என்னை மிகவும் கவர்ந்தது. **-ஏ.கஜன், கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்., கொழும்பு-15.**

'**உ**யிரங்கிகளின் வகைப்பாடு', 'கைத்தொழில் நாட்டை இனங்காணல்', 'சாக்தீவு', 'பனிப்புலிகள்' போன்ற ஆக்கங்கள் சிறப்பானவை. 'கல்வி முகாமைத்துவம்' பகுதி மாணவர்களின் நாடித் துடிப்பை அறிந்து வெளியாகின்றது. இவற்றுடன், ஏனைய ஆக்கங்களையும் வாசித்து மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டேன். **-ரீஷான் அஹமட், தெனிபிடிய, வெலிகம.**

**'சாக்தீவு' எனும் ஆக்கம் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. அதனை வாசிக்கும்போது, அத்தீவு பற்றிய காட்சிகள் எனது மனத்திரையில்**



**திரைப்படம் பார்ப்பது போன்று பதிவாகியது. அறியப்படாத தகவலை முந்திக்கொண்டு வழங்கிய உனக்கு மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும்.** **-மு.கிருபாகரன், ஆரையம்பதி, மட்டக்களப்பு.**

'**ப**னிப்புலிகள்', 'சாக்தீவு', 'வாரம் ஒரு நாடு' உட்பட, 'கைத்தொழில் நாட்டை இனங்காணல்', உயிரங்கிகள் எவ்வாறு பிரிக்கப்படுகின்றன?' போன்ற ஆக்கங்களும் அறிவுபூர்வமான விடயங்களைத் தாங்கி வந்திருந்தன. 'இராமாயணம்' விறுவிறுப்பாக நகர்கின்றது. 'பலே பலே வைத்தியர்' சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றது. **-ஸைனப் மஞூனா, ஹிங்குல் ஓய, மாவனல்லை.**

இந்த இதழில் (28.09.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.10.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம் வரைவோம் - 69

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எம்.மஹ்ரூப்

# கலைக் கைத்தொழில்கள்

எழுத்துக்களே கண்டுபிடிக்கப்படாத ஆரம்பகாலத்தில் ஆதிகால மக்கள் தமக்குக் கிடைத்த மண்கட்டி, மிருகங்களின் குருதி போன்றவற்றால் தமது உள்ளக் கிடக்கைகளை வரைந்து வெளிப்படுத்தினர். அதன்படி, ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது குகை ஓவியம் 'பைசன் மாடு' பற்றியதாகும். இவ்வாறு ஆரம்பமான கலைப் படைப்புகள் இன்றளவில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன.



## இலங்கையின் கலைக் கைத்தொழில்கள்

இலங்கையின் கலைக் கைத்தொழில்களை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

i. மட்பாண்டக் கைத்தொழில்.
ii. பாய் பின்னுதல்.
iii. மெழுகு வேலை.
iv. உலோகக் கைத்தொழில்.
v. முகமூடி தயாரித்தல்.
vi. நெசவு, யானைத்தந்தம், அரக்கு வேலைகள், குருத்தோலைக் கலைகள் உட்பட, ஏனையவை.

## மட்பாண்டக் கைத்தொழில்

மட்பாண்டக் கைத்தொழிலானது, புராதனகாலம் தொட்டு இலங்கையில் நடைபெற்று வரும் கலையுடன்கூடிய கைத்தொழிலாகும்.



மட்பாண்டங்களில் இரு முறைகளில் அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. அவை:

i. சூளையில் சுடுவதற்கு முன்னர் அலங்காரமிடல்.
ii. சூளையில் சுட்ட பின்னர் அலங்காரமிடல்.

சூளையில் சுடுவதற்கு முன்னரான மட்பாண்ட அலங்காரங்களின் போது சிறு குச்சிகளால் அலங்காரமிடப்படும். சிறு கீற்றுகள், ரேகைகள், அன்னாசி மலர், தாமரை மலர், பெதுறு, லியவல, அரசிலை, மீன் போன்ற அலங்காரங்கள் இதன் போது வரையப்படும். அதன் பின்னர், குருணிக்கற்களை அரைத்து சிவப்பு வர்ணம் பூசப்படும். வெண்களியால் வெள்ளை வர்ணமும் காரியத்தால் கறுப்பு வர்ணமும் உருவாக்கி, மட்பாண்டங்களின் மேல் பூசப்படும்.

இத்தகைய அலங்காரங்களை குடம், சட்டி, முட்டி, பானை, கூசா உட்பட பல பொருட்களில் காணலாம்.

இன்றளவில் இத்தொழில்களுக்கு புகழ்பெற்ற இடங்களாக களனி, பதுளை, தம்புள்ள, மதுரட்ட, நயாபுர, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, ஹன்வெல, தும்பறை, பொரலஸ்கமுவ போன்ற பிரதேசங்கள் திகழ்கின்றன. உள்ளூர் பாவனை மட்டுமன்றி உல்லாசப் பயணிகளைக் கவரும் பொருட்களாகவும் மட்பாண்டங்கள் விளங்குகின்றன.



(தொடரும்)



ச.கிருசாந்தன்,
இந்துக் கல்லூரி, கொழும்பு-04.



பாஹிம் ஹஸீம்,
தாருஸ்ஸலாம் ம.வித்.,
கொழும்பு.



த.சந்தோஷ்,
காமினி நலன்புரி பாட., வவுனியா.



எஸ்.ஹம்தா,
இக்ரா முஸ்லிம் ம.வித்.,
உலப்பனை.



எம். அபிலாந்தன்,
மூன்பிளேன் த.வித்., நுவரெலியா.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.சாபிரா,
ஸாஹிரா தே.பாட., அநுராதபுரம்.



ரிப்லான் ரிஸ்வான்,
அலவியா மு.ம.வித்., பாணந்துறை.




எஃப்.ஹஸ்னத்,
பாத்திமா பாலிகா ம.வித்.,
புத்தளம்.



எம்.என்.ஹாஜர்,
அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.



கே.சஹாரி,
வசந்தம் முன்பள்ளி, ஊவா ஹைலண்ட்ஸ்.



கு.வைஷாலினி,
சைவமங்கையர் வித்.,
கொழும்பு-06.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



கனேதென்னையைச் சேர்ந்த ஃபாத்திமா ஸுஹைனா, 19.09.2011 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



வியாங்கல்லையைச் சேர்ந்த பைஸர்-பஸ்ரினா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் யூஸுப், 20.09.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் உட்பட, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: அகீலா அஷ்ரப்)



மட்டக்களப்பு-வீச்சுகல்முனையைச் சேர்ந்த ஜூலியஸ்-சறோமியா தம்பதியரின் செல்வப் புதல்வன் சரோன் கிருஷ்னாத், 21.09.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



நாவலப்பிட்டியைச் சேர்ந்த கனகரட்ணம்-சரவேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹரிகரன், 27.09.2011 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் ஆஞ்சநேயர் அருள்பெற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: டி.கோகிலா)




சாய்ந்தமருதைச் சேர்ந்த ரஸாக்-ரிஸ்வானா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.ஆஷிக் இலாஹி, 27.09.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பா.சிப்னாஸ்)



கல்முனை- மருதமுனையைச் சேர்ந்த சஹ்ரான்-ஜென்ஸியா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் சஹ்ரான், 28.09.2011 (இன்று) தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் உட்பட, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



உடதலவின்னையைச் சேர்ந்த ரஸீன்-ரிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் ரஸாட், 28.09.2011 (இன்று) தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



எம்.ஸப்றீன்,
அல்-முனீர் வித்., சம்மாந்துறை-03



சல்பா பாருக்,
ரைட்வே சர்வதேச பாட., அக்குறணை.



நவீன்,
கிங்ஸ்டன் சர்வதேச பாட.,
வெள்ளவத்தை.



ஏ.ராஜன்,
சரஸ்வதி த.ம.வித்.,
லிந்துலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்குறை ஒரு தடையல்ல

அந்தப் பாடசாலையின் இலக்கிய மன்ற நிறைவு விழா வெகு விமர்சையாக நடந்துகொண்டிருந்தது. மாணவ-மாணவியர்கள் பக்திப்பாடல், தேசிய பாடல், நடனம், கரகாட்டம் ஆகிய நிகழ்வுகளை அனைவரும் ரசிக்கும் வகையில் வெகு சிறப்பாகச் செய்தனர்.

வருடந்தோறும் இந்நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக இலக்கியச் சொற்பொழிவு, புராணக்கதைகள் காட்டும் போதனை அல்லது சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சிறப்புரை என்று ஏதாவது ஒரு சிறப்பு நிகழ்ச்சி இடம் பெறும்.

ஆனால், இந்த வருடம் இலக்கிய மன்றச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் தமிழாசிரியர் கருணாகரன் வித்தியாசமான நிகழ்ச்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அவர் ஒருமுறை பக்கத்து நகரத்திற்குச் சென்றபோது, பஸ் நிலையத்தில் பார்வையற்ற இளைஞன் ஒருவன் பானையில் தோலைக் கட்டி, தகர டப்பாக்களை வைத்தபடி, கையிலுள்ள சிறுகுச்சியால் விதவிதமான இசைகளை எழுப்பி இசைக்கச்சேரி நடத்திப் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான்.

அவன் பாடிய பாடலை மெய்மறந்து கேட்ட கருணாகரன் அவனுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவ நினைத்தார். இலக்கியமன்ற நிறைவு விழா நிகழ்ச்சியை இவனைக்கொண்டு வித்தியாசமாகச் செய்யவேண்டும் என்று விரும்பினார். அதனால், அவனை அணுகி அந்த நிகழ்ச்சிக்கு ஒப்பந்தம் செய்தார். அந்த இளைஞனின் பெயர் பாலகுமாரன். உடனே தனது சம்மதத்தை அவன் நன்றியுடன் தெரிவித்தான்.

'தெருவில் பாடும் நமக்கு மேடையில் பாடும் வாய்ப்புக் கிடைத்துள்ளதே' என்று நினைத்து பேரானந்தம் அடைந்தான், பாலகுமாரன். பலநாள் கச்சேரி செய்தால், கிடைக்கக்கூடிய வருமானத்தை இரண்டு மணிநேரத்தில் சம்பாதிக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி பெருமை அடைந்தான். தனது முழுத்திறமைகளையும் வெளிப்படுத்தி, அந்தக் கச்சேரியில் ரசித்து இசையமைத்தான். தேவையற்ற உடைந்த பொருட்களைக்கொண்டு, விதவிதமாக ஒலியெழுப்பி, மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். இசை நிகழ்ச்சி முடிந்ததும், அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது. அனைவருக்கும் இருகரம் கூப்பி, நன்றியைத் தெரிவித்தான், பாலகுமாரன். ஆயிரம் ரூபாய் பரிசு கொடுக்க நினைத்த தலைமை ஆசிரியர் இரண்டாயிரம் ரூபாயைக்கொடுத்து, அவனைப் பாராட்டினார்.



அப்போது, பாலகுமாரன் மேடையில் பேசினான். "எனக்கு கச்சேரி செய்ய வாய்ப்பளித்த, இலக்கிய மன்ற செயலாளர் கருணாகரன் அவர்களுக்கும் பரிசு வழங்கிக் கௌரவித்த தலைமை ஆசிரியர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேடையில் நான் செய்த முதல் கச்சேரி இதுதான். உங்களின் கைதட்டலை வைத்தே பார்வையற்ற நான் எனது கச்சேரியின் தரத்தைப் புரிந்துகொண்டேன். பணத்திற்கு ஆசைப்பட்டுத்தான் கச்சேரி செய்ய வந்தேன். ஆனால், உங்களின் கைதட்டலைக் கேட்டதும் எனக்கு பணம் பெரிதாகத் தெரியவில்லை. வீதியில் நான் கச்சேரி செய்யும்போது, கிடைக்கும் வருமானமே எனக்குப் போதுமானதாக உள்ளது. எனவே, இந்தப் பணத்தை இந்த பாடசாலையில் படிக்கும் 'மாற்றுத்திறன்' (ஊனமுற்ற) கொண்ட ஓர் ஏழை மாணவனுக்கு கொடுக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதனால், மாற்றுத்திறனாளியான எனக்கும் ஓர் ஆத்மதிருப்தி கிடைக்கும்.

மாற்றுத்திறனாளிகள் தன்னம்பிக்கையோடு, ஒரே குறிக்கோளைக்கொண்டிருந்தால், அவர்களாலும் சாதனைகள் பல செய்ய முடியும். செவித்திறன் குறைந்த தோமஸ் அல்வா எடிசன்தான் பலருக்கும் பயன்படக்கூடிய அளவில் பல கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார். அதனால், சாதனை செய்ய நினைப்பவர்களுக்கு உடல் குறைபாடுகள் ஒரு தடையல்ல. எதற்கும் ஆகாத பொருள் எனக் குப்பையில் போட்டதை வைத்துத்தான் நான் இந்தக் இசைக்கச்சேரியை உங்கள் முன் செய்திருக்கிறேன். இதில் இருந்து நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களால் உபயோகப்படாது என்று ஒதுக்கிய பொருளும்கூட யாருக்காவது உபயோகப்படும். பொருளுக்கே அந்தக் குணம் என்றால், மனிதனாகப் பிறந்த நாம், மற்றவர்களுக்கு உதவும் வகையில் வாழ வேண்டுமல்லவா? அதனால், இந்தப் பணம் இல்லாதவர்களுக்கு, உதவட்டும்" என்று பாலகுமாரன் தனது மனதிலுள்ளதை மேடையில் கூறினான். இதைக் கேட்ட அனைவரும் நெகிழ்ந்து, மெய்மறந்து நின்றனர்.

# முட்டாள் சீடர்கள்

பரமார்த்த குருவின் வழிவந்தவர்தான் வரமார்த்த குரு. ஒருநாள் அவர் தனது முட்டாள் சீடர்களுடன் நீண்ட தூரப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். நீண்ட தூரம் பயணித்ததால், களைப்படைந்த குரு மயங்கிக் கீழே விழுந்துவிட்டார். பதறிப்போன சீடர்கள், தாம் கொண்டுவந்த பொருட்களை அப்படியே போட்டுவிட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் குருவைச் சுற்றி நின்றனர். பொழுதும்போய்விட்டது. இருள் சூழத் தொடங்கியது.

இருக்கின்ற கொஞ்சம் வெளிச்சம் மறையும்வரை அவரின் நான்கு சீடர்களும், குருவின் கை, கால், உடம்பு முழுவதையும் கைகளால் பிடித்துவிட்டபடி இருந்தனர். ஆனால், குருவோ பேச்சு மூச்சின்றிக் கிடந்தார். சிறிது நேரத்தில், குருவின் சீடராகிய கிருஷ்ணனும் ராமனும் தாம் எடுத்து வந்த நீரையும் விளக்கையும் கொண்டுவந்தனர். அந்த நீரை குருவின் முகத்தில் தெளித்தான் கணேசன். இதனால், குருவுக்கு சிறிது களைப்பு நீங்கியது. தொடர்ந்து முத்து என்ற அவரது சீடன் குடிக்க நீரைக் குருவுக்குக் கொடுத்தான். களைப்பு நீங்கினாலும் குருவால் எழுந்திருக்க முடியவில்லை.

"நீங்கள் மூவரும் குருவை தோளில் தூக்கிக்கொள்ளுங்கள். நான் ஒரு கையில் கமண்டலத்தையும் விளக்கையும் எடுத்தபடி உங்களுக்கு முன் விளக்கைக் கொண்டு செல்கிறேன்" என்றான் கணேசன் என்ற சீடன். அனைவரும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

இதன்படி குருவைத் தூக்கியபடியே நடந்தனர். அரைவாசித் தூரம் சென்றபின்னர், வழியில் ஒரு மரத்தில் குருவுடைய தலை 'மடார்' என்று மோதியது. "ஆ! ஐயோ! அம்மா!" என்று அலற, "பார்த்து வாருங்கள்..... வழியில் ஏதோ தடக்குவதுபோல் உள்ளது" என்றான் கிருஷ்ணன்.

அவர்களுக்குப் பின்னால் வந்த ராமன் "நீ சொல்வது சரி, குரு நமக்குப் பாடம் சொல்லித் தரும்போது சொன்னது, இப்போதுதான் என் நினைவுக்கு வருகிறது!" என்றான்

"என்ன? சொல்லும் சீக்கிரம்... நேரத்தைக் கடத்தாமல், என் தோள்களும் வலிக்கின்றன" என்றான் முத்து. "பாதை மாறிப் போகும்போதுதான் பயணம் தடைபடும்" என்று நம் குரு சொல்லியிருக்கிறார். அதனால், நாம் செல்லும் பாதையை மாற்றி இந்தப் பக்கமாகச் செல்வோம்" என்று கூறி வேறு ஒரு பாதையால் அவர்களை அழைத்துச் சென்றான். அவன் காட்டிய அப்பாதை வழியாகக் குருவை ஒருவாறு ஆசிரமத்தில் கொண்டுவந்து சேர்த்தனர். குருவைக் கட்டிலில் படுக்கவைத்து, கை, கால்களைப் பிடித்துவிட்டனர். தலையில் முன்னர் பட்ட அடியால், வலி பொறுக்க முடியாமல், "ஐயோ! அம்மா!" என்று அரைக் குரலில் பிதற்றிக் கொண்டிருந்தார் குரு.

"நம் குருவுக்குப் பசியால் உடல்நிலை பலவீனமடைந்துள்ளது போலிருக்கிறது. அவருக்கு பழைய



உணவைக் கொடுக்கக்கூடாது..." என்று சூடாக சோறு சமைத்துக் கொடுப்பதென முடிவு செய்தான் முட்டாள் சீடர்களின் ஒருத்தனான கணேசன். குரு ஒருநாள் புளிச்சோறு சமைத்ததை நினைவுபடுத்தி அதனைச் சமைத்தான். ஆனால், தாளிப்பதற்கு கருவேப்பிலைக்குப் பதிலாக வேப்பிலையைப் போட்டுத் தாளித்துவிட்டான்.அச்சோற்றையே தன் குருவுக்கும் ஊட்டினான். கசப்பால் குரு, "துப்.... துப்....துப்...." என்று துப்பிவிட்டு வாயை இறுக்க மூடிக்கொண்டார். "நம் குரு சாப்பிடுகிறார் இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை" என்றான் கணேசன். "சாப்பிடவில்லையென்றால் விடு அவருக்குப் பசியில்லைப் போலிருக்கிறது" என்றான் கிருஷ்ணன்.

அப்போது ராமன் என்னும் சீடன், "சாப்பிடவில்லையென்றால் நம் குரு இறந்துவிடுவார். எனது அம்மா நான் சிறுவயதில் பால் குடிக்கவில்லை என்றால் என் கையையும், காலையும் இறுக்கிப்பிடித்துக்கொண்டு வாயில் பாலை ஊற்றுவார்கள். நான் கத்துவேன் அப்போதும் விடாமல் பாலை என் வாயில் ஊற்றுவார்கள். அதேபோல், நாங்கள் மூவரும் நம் குருவின் கையையும் காலையும் பிடித்துக்கொள்கிறோம். நீ அவருக்கு ஊட்டிவிடு" என்றான்.

முட்டாள் சீடர்கள் அனைவரும் இதற்கு ஒப்புக்கொண்டனர். கணேசன் குருவுக்குச் சோறு ஊட்டினான். குரு வேண்டாம்! என்று சொல்ல முடியாமல், தலையை ஆட்டினார். கை கால்களை உதறினார். மற்ற சீடர்கள், ராமன் சொன்னது போன்று கை, கால்களை அமுக்கிப் பிடித்துக்கொண்டனர். சோற்றை ஊட்டிக்கொண்டேயிருந்தான் கணேசன். குருவால் ஒன்றும் சொல்ல முடியாமல் சாப்பாட்டை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கினார். சோறு ஊட்டிய பின்னர் குருவைத் தூக்கி இருத்திவிட்டு, சீடர்கள் அனைவரும் தரையில் வரிசையாகப் படுத்துறங்கினர்.

பொழுது புலர்ந்தது. குரு எழுந்திருக்கவில்லை. இதைக்கண்ட ராமன் குருவிற்கு ஏதோ ஆகிவிட்டதென எண்ணி வைத்தியரை அழைத்துவர ஓடினான். சிறிது நேரத்தில் வைத்தியரை அழைத்து வந்தான். அவர் குருவின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, பயப்பட ஒன்றும் இல்லை. உடம்பில் வலி இருக்கின்றது. அதுதான் அசதியில் இப்படிப் படுத்துத் தூங்கிவிட்டார். நான் ஒரு லேகியம் தருகிறேன். காலையில் ஒன்று மாலையில் ஒன்று கொடுங்கள். கொடுத்ததும் நீர் நிறையக் குடிக்கவேண்டும். மீண்டும் நாளைக்கு நான் வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

வைத்தியர் சொன்னதுபோல லேகியத்தை குருவின் வாயில் போட்டு நீரைக் கொடுத்தனர். குரு மெல்ல மெல்ல விழுங்கினார். உடனே, "சீடர்களே! குருவுக்கு மருந்து கொடுத்தவுடன் நீர் நிறையக் கொடுக்கவேண்டும் என்று வைத்தியர் கூறியுள்ளார். அதனால், ஒரு குடம் நிறைய நீரைக் கொண்டுவாருங்கள்" என்றான் கிருஷ்ணன் எனும் சீடன். குருவுக்கு அப்போது ஓரளவு சுயநினைவு வந்திருந்ததால், கிருஷ்ணன் சொன்னது குருவின் காதில் விழுந்துவிட்டது.

"வேண்டாம்! போதும்!" என்று குரு லேசாக எழுந்து கையசைத்தார். மற்ற சீடர்கள், அவர் கை, கால்களைப் பிடித்துக் கொண்டனர். குடம் ஒன்றில் நீரை எடுத்து அவர் வாயைப் பிளந்து ஊற்றினான் கிருஷ்ணன். குருவுக்கே அதிகளவான நீரைக் குடிக்க முடியவில்லை. வயதாகிவிட்டதால், சீடர்களின் பிடியிலிருந்தும் அவரால் எழும்ப முடியவில்லை. கத்தினார், கதறினார். அலறல் சத்தம் கேட்டு அவ்வழியாக வந்த ஒருவர் ஆசிரமத்தின் உள்ளே எட்டிப்பார்த்தார். அங்கு சீடர்கள் குருவை வலுக்கட்டாயமாகப் பிடித்து, குடத்து நீரை குருவின் வாயில் ஊற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்துப் பதறிப்போய் ஓடிச் சென்று அவர்களை விலக்கினார்.

"அடப்பாவிகளா! மருந்து கொடுத்ததும் இரண்டு வேளை அல்லது ஒரு குவளை நீர்தான் கொடுக்கவேண்டும். நீங்கள் ஒரு குடம் நிறைய நீரை எடுத்துவந்து அவர் வாயில் ஊற்றுகிறீர்களே! நான் வராவிட்டால் இந்நேரம் அவரைக் கொன்று போட்டிருப்பீர்கள்" என்றார்.

உடனே "வைத்தியர்தான் நீர் நிறையக் கொடுக்கச் சொல்லிச் சொன்னார். ஆனால், எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை" என்றான் முட்டாள் சீடர்களில் ஒருவனான முத்து.

ஆனால்,பாவம் குரு தனது சீடர்களின் முட்டாள்தனமான செயல்களைப் பார்த்து திரு திரு என முழித்தபடியே இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்

අම්මා: **පුතා, ලැහැස්ති වෙන්න පල්ලියට යන්න.**
புதா, லெஹெஸ்தி வென்ன பல்லியட்ட யன்ன.
அம்மா: மகன், கோயிலுக்குப் போக ஆயத்தமாகுங்கள்.

පුතා: **මොන පල්ලියටද අම්මේ?**
மொன பல்லியட்டத அம்மே?
மகன்: எந்தக் கோயிலுக்கு அம்மா?

අම්මා: **කොච්චිකඩේ අන්තෝනි මුනින්ද්‍රයාගේ පල්ලියට.**
கொச்சிகடே அந்தோணி முனின்திரயாகே பல்லியட்ட.
அம்மா: கொச்சிக்கடை புனித அந்தோனியார் கோயிலுக்கு.

පුතා: **අද විශේෂ දවසක්ද අම්මේ?**
அத விசேஷ தவசக்த அம்மே?
மகன்: இன்று விசேட தினமா அம்மா?

අම්මා: **ඔව් පුතා. අද ඒ පල්ලියේ මංගල්ලේ.**
ஒவ் புதா. அத ஏ பல்லியே மங்கல்லே.
அம்மா: ஆம் மகன். இன்று அந்தக் கோயில் திருவிழா.

පුතා: **එතකොට මංගල්ලෙට හුඟක් සෙනඟ ඇතිනේ අම්මේ?**
எதகொட மங்கல்லெட ஹூங்கக் செனங்க எதினே அம்மே?
மகன்: அப்படியானால், திருவிழாவிற்கு அதிக சனம் வரும்தானே அம்மா?

අම්මා: **ඔව් පුතා. හුඟක් සෙනඟ එනවා; පෙරහැරත් යනවා.**
ஒவ் புதா. ஹூங்கக் செனங்க எனவா; பெரஹெரத் யனவா.
அம்மா: ஆம் மகன். அதிகமானோர் வருவார்கள். ஊர்வலமும் போகும்.

පුතා: **හොඳයි අම්මේ, මම ලැහැස්ති වෙන්නම්.**
ஹொந்தய் அம்மே, மம லெஹெஸ்தி வென்னம்.
மகன்: நல்லது அம்மா, நான் ஆயத்தமாகின்றேன்.

**பயிற்சி**

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. கோயிலுக்குப் போக ஆயத்தமாகுங்கள்.
......................................................
ii. இன்று ஒரு விசேட தினம்.
......................................................
iii. திருவிழாவிற்கு அதிக சனம் வரும்.
......................................................






**தனி வாக்கியம் மற்றும் கூட்டு வாக்கியம்**
**Simple Sentence and Compound Sentence**

'**But**' எனும் இணைக்கும் சொல்லை (Conjunction) கையாண்டு, தனித்தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியங்களாக அமைக்கும் முறை பற்றி இங்கே பயில்வோம்.

**✱ குறிப்பு: ஒன்றுக்கொன்று எதிரிடையான கருத்தினைக்கொண்ட வாக்கியங்கள், 'but' எனும் இணைக்கும் சொல்லால் ஒன்றிணைக்கப்படுகின்றன.**

(அ) ரஞ்சித் மிகவும் பலசாலியாக இருக்கின்றான்.
Ranjith is very strong.
(தனி வாக்கியம்-Simple Sentence)

(ஆ) அவன் சோம்பேறி ஆவான்.
He is lazy.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) ரஞ்சித் மிகவும் பலசாலியாக இருக்கின்றான், எனினும் அவன் சோம்பேறி ஆவான்.
Ranjith is very strong, but he is lazy.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

✱———✱———✱

✱ **குறிப்பு:** இவ்வாறான ஒரு கூட்டு வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, முதலாவது வாக்கியத்தின் இறுதியில், காற்புள்ளி (,) இருத்தல் வேண்டும். அதாவது, **but** எனும் இணைக்கும் சொல்லுக்கு முன்னால் இடம்பெறுகின்ற வாக்கியத்தின் இறுதியிலேயே இந்த காற்புள்ளி இடம்பெற வேண்டும். இது ஆங்கில இலக்கண மரபு முறையாகும்.

(ஈ) மேரி நூலகத்திற்குச் சென்றாள்.
Mary went to the library.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(உ) அவள் எதுவித புத்தகங்களையும் இரவல் வாங்கவில்லை.
She didn't borrow any books.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஊ) மேரி நூலகத்துக்குச் சென்றாள். ஆனால், அவள் எதுவித புத்தகங்களையும் இரவல் வாங்கவில்லை.
Mary went to the library, but she didn't borrow any books.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

✱———✱———✱

(எ) நிமல் வங்கி முகாமையாளரை சந்தித்தான்.
Nimal met the bank manager.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஏ) அவன் அவருடன் கதைக்கவில்லை.
He didn't speak to him.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஐ) நிமால் வங்கி முகாமையாளரைச் சந்தித்தான். ஆனால், அவன் அவருடன் கதைக்கவில்லை.
Nimal met the bank manager, but he didn't speak to him.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ 'ஏரிகளின் நாடு' என அழைக்கப்படுவது பின்லாந்தாகும். 'மாடக் கட்டட' நகரம் என அழைக்கப்படுவது எந்த நகரத்தை?

நியூயோர்க்



✱ கணிதத்தின் தந்தையெனப் போற்றப்படுபவர் ஆக்கிமிடிஸ் ஆவர். இவர் முதன் முதன்முதலாக எதனைக் கண்டுபிடித்தார்?

பை π யை கண்டுபிடித்தார்

✱ ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வெள்ளை மாளிகையாகும். பிரித்தானிய மகாராணியின் உத்தியோகபூர்வ மாளிகை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?



பக்கிங்ஹாம் பெலஸ்




✱ இலக்கியத்திற்கு நோபல் பரிசு வழங்கப்படுவதை நாம் அறிவோம். அந்தவகையில் இங்கிலாந்தில் வழங்கப்படும் உலக இலக்கியப் பரிசின் பெயர் என்ன?

புக்கர் பரிசு

✱ அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் யார்?

அமெரிக்கா வெஸ்பூசியர்



✱ நீண்டநேரத்தை அல்லது நீண்ட ஒரு நாளைக்கொண்ட கிரகம் எது?

வெள்ளி (வீனஸ்) கிரகமாகும். 224.7 புவி மணிகொண்டது.



✱ இந்தியாவின் முதலாவது பிரதமர் யார்?

ஜவஹர்லால் நேரு





✱ பாகிஸ்தானின் தலைநகரம் எது? அங்கு பாவனையில் உள்ள நாணய அலகின் பெயர் என்ன?

தலைநகர் -இஸ்லாமாபாத்.
நணயம் ரூபா

✱ 2010 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் டில்லியில் நடைபெற்றது. அந்தவகையில், 2014 இல் 20 ஆவது பொதுநலவாய போட்டிகள் எங்கு நடைபெறும்?



ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில்

✱ பென்சிலைக் கண்டுபிடித்தவர் (1565இல்) சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த 'கன்ராட்கெஸ்னர்' என்பவராவார். குமிழ்முனை (போள்பொயின்ட்) பேனாவைக் கண்டுபிடித்தவர் யார்?

ஹங்கேரியைச் சேர்ந்த வாடிஸ்லோ பைரோ

✱ உதைபந்தாட்ட பந்திற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவுகள்.... அதன் சுற்றளவு 68.71 செ.மீற்றர். ஆகும். அதற்கமைய, ஆடுகளத்தின் நீளம், அகலம் எவ்வளவு?



நீளம் - 91.12 மீற்றர் அகலம் - 45.91 மீற்றர்




✱ ஐக்கிய நாடுகள் சபை தினம் ஒக்டோபர் 24 இல் நினைவுகூரப் படுவது போன்று, சர்வதேச ஆசிரியர் தினம் எப்போது நினைவுகூரப்படுகின்றது?

ஒக்டோபர் 06

✱ தமிழில் முதலாவது சிறு கதையை எழுதிய ஆசிரியர் வா.வே.சு.ஐயர் ஆவார். தமிழில் 'சிறுகதை மன்னன்' என அழைக்கப்படும் எழுத்தாளர் யார்?

புதுமைப்பித்தன்



**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# மியன்மார் முழுமையாக சுதந்திரம் அடையவில்லை

**-சூக்கி**

மியன்மார் நாடு (முன்னாள் பர்மா) இராணுவத்தின் பிடியிலிருந்து விடுபட்டாலும் அந்நாட்டு மக்களுக்கு இன்னமும் முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவியான ஆன்சாங் சூக்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் "நாட்டில் ஓரளவு அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் முழுமையான சுதந்திரத்தை அடைய நீண்டகாலம் செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறே, சீர்திருத்தங்களைச் செய்ய விரும்புகின்ற அரசாங்கம் அதனை விரைந்து செய்ய



வேண்டும். நாட்டில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும் அமைதியான முறையிலேயே நிகழ வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றேன்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# டென்மார்க்கின் பெண் பிரதமர்



டென்மார்க்கின் புதிய பிரதமராக ஹெல்லி டார்னிங் ஹமிட் பதவியேற்றுள்ளதன் மூலம் அந்நாட்டின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். டென்மார்க்கில் கடந்தவாரம் நடைபெற்ற தேர்தலில் 179 நாடாளுமன்ற ஆசனங்களில் 89 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள டார்னிங் ஷமிட்டின் இடதுசாரி கூட்டணிக் கட்சி ஆட்சி அமைக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான வலதுசாரி கட்சி 86 ஆசனங்களை மாத்திரமே வெற்றிகொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது. தோல்வியுற்ற பிரதமர் லார்ஸ் லொயெக்கெராஸி முப்ஸன் தமது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அதிக நேரம் ஒளிபரப்பாகிய டி. வி. நிகழ்ச்சிக்கு தடை!



ஆடல் பாடல்களை உள்ளடக்கிய 'டெலன்ட் ஷோ என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியானது வரையறை செய்யப்பட்ட நேரத்தையும் தாண்டி நீண்ட நேரத்திற்கு ஒளிபரப்பாகி வந்தமையால் அந்நிகழ்ச்சியை ஒளிபரப்பக்கூடாது என்று ஒருவருட கால தடையை சீன அரசாங்கம் விதித்துள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக சமய விடயங்கள், போக்குவரத்துப் பாதுகாப்பு முறைகள், வீட்டுப் பெண்களுக்கான நிகழ்ச்சிகள் போன்ற அறிவூட்டல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஒளிபரப்பாகின்ற 'எப்பிஸோட்ஸ் ஒஃப் சுப்பர் கேர்ள்' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பிரதிசெய்தே, சீனாவின் 'ஹியுமன் செலலைட், என்ற தொலைக்காட்சி சேவை இந்த நிகழ்ச்சியை இத்தனை காலமும் ஒளிபரப்பி வந்தது எனினும், இந்த நிகழ்ச்சி குறித்த நேரத்தையும் தாண்டி அதிக நேரத்திற்கு ஒளிபரப்பாகி வருகின்றமை தொடர்பாக புகார்கள் செய்யப்பட்டதையடுத்தே சீன அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

குறிப்பாக, இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரையறை செய்யப்பட்டுள்ள நேரம் 90 நிமிடங்களேயாகும். ஆனால், மேற்படி நிகழ்ச்சியை இந்த தொலைக்காட்சி சேவை வரையறுத்த நேரத்தையும் தாண்டி ஒளிபரப்பியுள்ளமை உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

**அற்லஸ் கேள்வி - 327**

**கேள்வி:** டென்மார்க் நாடாளுமன்றம் எத்தனை ஆசனங்களைக் கொண்டது?

சரியான விடை...................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 327,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 325 இன் சரியான விடை: 2 வருடங்கள்**

பரிசு பெறுவோர்

ஐ.முஹம்மது முஜீப்,
இமாம்றூமி வீதி, நிந்தவூர்-03.

எஃப்.சுலைஹா,
அஹஸ்வெவ, ஹப்புகஸ்தலாவை.

ஜெயக்குமார் உஷா,
பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட் சபையின் வருமானம் அதிகரிப்பு



இந்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஓராண்டு காலப் பகுதிக்குள் இந்திய கிரிக்கெட் சபை 1.89 பில்லியன் இந்திய ரூபாய் (39.68 மில்லியன் அ.டொலர்) வருமானத்தை ஈட்டியிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபையின் வருடாந்த கணக்கறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இந்த வருமானமானது, இதற்கு முன்னைய வருடத்தை விட 200% மடங்கு அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகளின் மூலமே இந்திய கிரிக்கெட் சபை இந்தளவிற்கு கூடியளவான வருமானத்தை ஈட்டியிருப்பதாகவும் அவ்வாறே, 'செம்பியன் லீக்' போட்டிகளின்மூலமும் 10.11 மில்லியன் டொலர் மேலதிக வருமானத்தையும் ஈட்ட முடிந்துள்ளதாகவும் இந்திய கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது. இதுவும் முன்னைய போட்டிகளில் பெற்ற வருமானத்தைவிட 23 வீதம் அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் கடந்த வருடத்தில் டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் இந்திய அணி முதலாவது இடத்தில் இருந்தமையால் உலகில் எந்தவொரு நாட்டில் இந்திய அணி போட்டியிட்டாலும் அதிக லாபத்தை ஈட்டக்கூடிய அணியாக அது இருந்ததாகவும், இந்தியாவிலுள்ள அதிக எண்ணிக்கையிலான ரசிகர்கள் காரணமாகவும், விளம்பர அனுசரணையாளர்களின் முதலீடும் அதிகரித்ததன்மூலம் அதிக லாபத்தை ஈட்ட முடிந்ததாகவும் கூறப்படுகின்றது.



# ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து சச்சின் ஓய்வுபெற உரிய தருணம் இதுவே



இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரரான சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதற்கு சரியான தருணம் வந்திருப்பதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹோல்டிங் தெரிவித்துள்ளார்.

அன்றைய நாட்களில் தனது கடுமையான வேகப்பந்து வீச்சின் மூலம் எதிரணி துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்தித் திணறடித்தவர் தான் இந்த மைக்கல் ஹோல்டிங். தற்போது இவர் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பான தொலைக்காட்சி வர்ணனையாளராக இருந்து வருகின்றார்.

மேலும், கருத்துத் தெரிவித்துள்ள ஹோல்டிங் "இங்கிலாந்துடனான சுற்றுப்பயணத்தில் ராஹுல் டிராவிட்டின் துடுப்பாட்டம் அற்புதமாக இருந்தது, அவர் சுயநல மற்ற ஓர் வீரர், இவரைப் போன்று சச்சின் டெண்டுல்கரும் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதே சிறந்தது. அதற்கான தருணம் வந்துள்ளது. அவரது ஒருநாள் போட்டி ஓய்வானது, டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவதற்கு அவருக்கு வாய்ப்பாக அமையும். எனவே, ஒருநாள் போட்டிகளிலிருந்து சச்சின் ஓய்வு பெறுவதன்மூலம் இளம் வீரர்களுக்கு வாய்ப்பினை வழங்க முடியும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பங்களாதேஷ் - பாகிஸ்தான் போட்டிகள் டிசம்பரில்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த வருட இறுதியில் பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுலா செல்லவுள்ளதாக தெரியவருகின்றது.

ஐ.சி.சி.யின் கால அட்டவணையின் படி, இரண்டு நாடுகளும் போட்டிகளில் ஈடுபடாத காலகட்டம் எதுவென, கண்டறியப்பட்டு அந்தக் காலப்பருவத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ் போட்டிகளுக்கான திகதிகளை நிர்ணயிப்பதற்கு இரண்டு நாடுகளினதும் கிரிக்கெட் சபை அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.



அநேகமாக, இந்த வருடம் டிசம்பர் மாதத்திலேயே இப்போட்டிகள் நடைபெற வாய்ப்பிருப்பதாகவும் கருதப்படுகின்றது. அதாவது, ஒக்டோபர் மாதம் மேற்கிந்திய தீவுகள் அணி பங்களாதேஷுக்கு விஜயம் செய்து போட்டிகளில் ஈடுபடவுள்ளது. இந்தப் போட்டிகள் நொவெம்பர் மாதமளவில் நிறைவடைந்தவுடன் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை பங்களாதேஷுக்கு போட்டிகள் இல்லாமல் இருப்பதாகவும் எனவே, இந்தக் காலகட்டத்தைக் கவனத்தில் கொண்டே டிசம்பர் மாதமளவில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷுக்கு விஜயம் செய்யக்கூடிய சாத்தியம் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

## DRS முறை இல்லை

இன்னும் சில வாரங்களில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடர்களில் மூன்றாம் நடுவரை நாடும் 'DRS' வழிமுறை நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகளில் மாத்திரமன்றி சிம்பாப்வேயுடனான போட்டிகள், மற்றும் ஜனவரியில் நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான போட்டிகளிலும் கூட இவ்வழிமுறை பயன்படுத்தப்படாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரியின் கருத்தின்படி, மேற்படி DRS முறையினால் டெஸ்ட் போட்டியில் சில பாதகமான முடிவுகள் ஏற்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# இங்கிலாந்தின் 20/20 அணியின் தலைவர் 'குக்'



இங்கிலாந்து-மே.இ.தீவுகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட், போட்டிகளில் 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பிற்கு எலஸ்ட்டயர் குக் நியமிக்கப்படுகின்றார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடந்து முடிவடைந்த ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் போட்டியிட்ட இங்கிலாந்து அணியின் 20/20 அணியின் தலைவர் 'ஸ்டுவர்ட் புரோட்' காயங்களுக்கு உள்ளாகியமையின் காரணமாகவே, அவருக்கு பதிலாக 20/20 தலைமைப் பதவி எலஸ்ட்டருக்கு வழங்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை தனது தலைமையின்கீழ் வெற்றிகொண்டதற்காகவே, எலஸ்ட்டருக்கு 20/20 தலைமைப்பதவியும் வழங்கப்படுகின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

# தேர்வுக்குழு தலைவராக தொடர்ந்தும் ஸ்ரீகாந்த்



இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவரான ஸ்ரீகாந்தின் பதவிக் காலம் மேலும் ஒருவருட காலத்திற்கு நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, கடந்த மூன்றாண்டு காலமாக, இந்திய அணியின் தேர்வுக் குழுத் தலைவராக இருந்த ஸ்ரீகாந்தின் பதவிக்காலம் இந்த வருடத்துடன் முடிவடைந்ததையடுத்து இம்முறை அவரது பதவிக்காலம் நீடிக்கப்பட மாட்டாது என்றே எதிர்பார்க்கப்பட்டது. இங்கிலாந்துடனான போட்டிகளில் இந்திய அணி பலத்த பின்னடைவை அடைந்ததையிட்டே இந்தக் கருத்து நிலவி வந்தது.

ஆனால், ஸ்ரீகாந்த் தெரிவு செய்திருந்த இந்திய அணியே இம்முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதைக் கவனத்தில் கொண்டு இந்திய கிரிக்கெட் சபை அவரது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடகாலத்திற்கு நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு புதிய தலைவர்



சிம்பாப்வே அணியிடம் படுதோல்வி அடைந்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணியில் எதிர்வரும் நாட்களில் பல மாற்றங்கள் நிகழவிருப்பதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதற்கமைய, பங்களாதேஷ் அணியின் தலைவர் பதவியை அந்த அணியின் விக்கெட் காப்பாளர் முஷ்பிகார் ரஹிம்முக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போதே ஆரம்பமாகிவிட்டன.

அடுத்ததாக பங்களாதேஷ் அணி மே.இ.தீவுகள் அணியுடன் போட்டியிடவுள்ளது. இந்த போட்டியின் போது, பங்களாதேஷ் அணிக்கு முஷ்பிகார்தான் தலைவராக செயற்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்களாதேஷ் அணியின் தலைவராக இருந்த சக்கிப் அல் ஹசன் தோல்விகளின் அழுத்தம் காரணமாக, மேலும் சிலருடன் தலைமைப் பதவியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை பற்றிய விபரங்கள்



யானைகள் 'எலிபண்டிடே' எனும் குடும்பத்தைச் சேர்ந்தவை. அவற்றின் முன்னங்கால்கள் ஒருநாளில் சுமார் 300 கிலோ எடையுள்ள தாவர உணவுகளை யானை உட்கொள்ளும். பூமியில் வாழும் பாலூட்டிகளில் யானையே மிகப் பெரியது. இந்த விலங்கினத்திற்கு 4 முழங்கால்கள் உள்ளன. யானையின் தந்தங்கள் அவற்றினது வாழ்நாள் முழுவதும் வளர்ச்சி அடையக்கூடியன. விலங்கினத்தில் யானைகளால் மட்டுமே குதிக்க முடியாது. யானையின் கால்களின் கீழ்ப்புறத்தில் மனிதருக்கு இருப்பதைப்போன்று ரேகைகள் காணப்படும்.



வட்டவடிவிலும் பின்னங்கால்கள் நீள் வடிவிலும் காணப்படுகின்றன. ஓர் ஆண் யானையின் மொத்த எடை சுமார் 5,000kg ஆகும். யானை ஒன்று தனது துதிக்கையினால் ஒரே நேரத்தில் சுமார் 9 லீற்றர் நீரை உறிஞ்ச முடியும்.

ஆர்.பிரசன்யா,
என்பீல்ட் த.ம.வித்., டிக்கோயா.

## பொது அறிவு

1. 'CEB' என அழைக்கப்படுவது - இலங்கை மின்சார சபை (Ceylon Electricity Board)
2. 'CWE' என அழைக்கப்படுவது - இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம். (Ceylon Wholesale Establishment)
3. 'MC' என அழைக்கப்படுவது - மாநகர சபை. (Municipal Council)
4. 'UC' என அழைக்கப்படுவது - நகர சபை (Urban Council)
5. 'VC' என அழைக்கப்படுவது - கிராம சபை (Village Council)
6. 'MP' என அழைக்கப்படுபவர் - நாடாளுமன்ற உறுப்பினர். (Member of Parliament)

எம்.ஐ.எப்.ஹஸ்னா,
அல்-ஹிக்மா மு.ம.வித்., கும்புக்கந்துரை

## எனது பாடசாலை

* எனது பாடசாலையின் பெயர் இர/ஜெய்லானி தேசிய பாடசாலை.
* இங்கு இரண்டாயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
* ஐம்பது ஆசிரியர்கள் எனது பாடசாலையில் கல்வி கற்பிக்கின்றனர்.
* பல கட்டடங்களைக்கொண்டு ஆலமர விருட்சம்போல் உயர்ந்து நிற்கின்றது எனது பாடசாலை.
* நாங்கள் விளையாட பெரிய விளையாட்டு மைதானமொன்றும் இங்கு காணப்படுகின்றது.

ஏ.எம்.ஷாஹிட் அஹமட்,
இ/ஜெய்லானி தே.பாட.,
பலாங்கொடை.

## விடுகதைகள்

1. நீருண்டு, பாலுண்டு, பூவுண்டு, தேனில்லை. அது என்ன?
2. பலர் ஏறி ஓடினாலும், படுத்தவன் எழும்ப மாட்டான். அவன் யார்?
3. பாலிலும் இது உருவாகும். நூலிலும் இது உருவாகும். அது என்ன?
4. தரையில் வளராத மரம், தலையில் வளரும். கிளையுண்டு, இலையில்லை. அது என்ன?
5. உருவமோ கறுப்பு. உள்ளமோ சிவப்பு. அது என்ன?
6. மரத்தில் காய்க்காத பழம். என்ன பழம்?

### விடைகள்

1. தேங்காய் 2. பாதை
3. ஆடை 4. மான்கொம்பு
5. தேயிலைத்தூள் 6. ஐஸ் பழம்

எஸ்.எல்.எம்.ஸாஹிர்,
மடிகே மிதியாலை மத்.கல்.,
குருணாகலை.



## தென்னை மரம்

ஒற்றைக்காலில் ஊன்றி மண்ணில்
உயர்ந்து நிற்கும் அன்னை
பெற்றுப் பேணி வளர்த்த பிள்ளை
பிறருக்கு அளிப்பார் தன்னை!

பற்றி நாமும் தலையைச் சீவின்
பருகுவதற்குப் பானம்
வற்றி நாவும் வரளும் போது
விளங்கிடுவார் தானம்!

சுற்றம் சூழப் பந்தி, பழம்
சுகந்த பாக்கு, முல்லை
வெற்றிலையோடு இவரில்லாது
விழாக்கள் ஏதும் இல்லை!

எம்.யூ.ஹப்ஸா,
மாறை/மின்ஹாத் தே.பா.,
திக்குவல்லை.

# சிங்கமும் நரியும்



ஒரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் சோம்பேறி. அதற்கு அடிக்கடி வெளியில் சென்று வரும் பழக்கம் இல்லாமையால் தனது குகையினூடாக வரும் மிருகங்களையெல்லாம் மிகத் தந்திரமாகக் கொன்று இரையாக்கி வந்தது. ஆனால், இரண்டு நாட்களாக எந்த மிருகமும் சிங்கத்தின் குகைக்கருகே வரவில்லை. இதனால், அது பசி தாங்க முடியாமல் தவித்தது. தானே சென்று ஒரு மிருகத்தைப் பிடித்து வரவேண்டும் என்றெண்ணி குகைக்கு வெளியே வந்தது.

சிங்கம் இரைதேடி நெடுந்தூரம் சென்றும் ஒரு மிருகம்கூட அதன் கண்ணில் படவில்லை. ஓர் இடத்தில் நின்று சுற்றும் முற்றும் ஏதாவது மிருகம் தென்படுகிறதா? எனக் கவனித்தது. ஆனால், தூரத்தில் ஒரு குகை இருப்பதைக்கண்டு அக்குகைக்குள்ளே சென்று பார்த்தது. 'இங்கே கண்டிப்பாக ஏதாவது மிருகம் வசிக்கக்கூடும். அது வந்தால் பிடித்து உண்ணலாம்' என்று நினைத்து அங்கேயே மறைவாக இருந்தது.

அந்தக் குகை ஒரு நரிக்குச் சொந்தமானது. மாலையானதும் அக்குகையை நோக்கி வந்த நரி குகை வாயிலில் ஏதோ ஒரு மிருகத்தின் காலடியைக்கண்டு சற்று யோசித்தது. 'ஏதோ மிருகம் என் குகையினுள் நுழைந்துள்ளது' என்று நினைத்தவாறே தனது தந்திரமான மூளையை உபயோகித்தது.

"குகையே! நீ ஏன் என்னை இன்று வரவேற்க மறுத்துவிட்டாய்? ஏதாவது மிருகம் ஒளிந்திருந்தால் நீ வரவேற்கமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இங்கு ஒரு மிருகத்தையுமே காணவில்லையே!" என்று புத்தி சாதுர்யமாக நரி உரையாடியது. உள்ளிருந்த சிங்கம் இதைக் கேட்டுவிட்டது. 'இந்த நரி வரும்போதெல்லாம் இந்தக் குகை பேசும்போலிருக்கிறது. இப்போது நான் வந்திருப்பதால் தான் இது பேசாமலிருக்கிறது போலும் என்றெண்ணிய சிங்கம் "உள்ளே வரவேண்டும் நரியாரே" என்று கூறியது. இது கேட்ட நரி தப்பினேன்; பிழைத்தேன் எனக் கூறிக்கொண்டு காட்டுக்குள் ஓடி மறைந்தது. சிங்கம் தனது முட்டாள்தனத்தால் அன்று முழுவதும் பசியால் வாடியது.





## சிற்சில துளிகள்

* இரத்த சிவப்பணுக்கள் உருவாகும் இடம் எது?
  எலும்பின் மஜ்ஜை
* நிணநீரில் அதிகமாக இருக்கும் அணுக்கள் எவை?
  சிவப்பணுக்கள்
* நம் உடலில் 'உயிர் முடிச்சு' என்றழைக்கப்படும் பகுதி எது?
  முகுளம்
* செல் சுவாசித்தலை நிகழ்த்தக்கூடிய உறுப்பு எது?
  மைட்டோ காண்டிரியா
* காந்த விசைக்கோடுகளை ஈர்க்கும் உலோகம் எது?
  எஃகு
* எமக்கு மிகத் தொலைவில் உள்ள நட்சத்திரம் எது?
  ஆண்டிரோமேடா

எம்.டி.இஸ்ஸத் இஷாரா,
கமு/அல்-மனார் மத்திய கல்., மருதமுனை-02.

# 'அகராதி'




டொக்டர் சாமுவேல் ஜோன்சன் என்பவரே (Dr.Samuel Johnson) முதன்முதலாக ஆங்கில அகராதியை (Dictionary) உருவாக்கியவராவார். இவர் முதன்முதலாக சொற்களை அகரவரிசை ஒழுங்கில் (Alphabetical Order) தயாரித்தார். அதன்பின், சொற்களை அமைத்தார். எனினும், சொற்களின் கருத்தை எழுதுவதற்குப் பதிலாக சொல்லின் முழு வரைவிலக்கணத்தையும் எழுதினார். வாசிப்பவர் முழுமையாக ஒரு சொல்லின் கருத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. அதனால், ஒரு சொல்லுக்குப் பல கருத்துக்களை அமைத்து அதற்கான விளக்கங்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் கொடுத்தார். அவர் தயாரித்த இந்த அகராதியின்மூலமே இன்று நாமனைவரும் பயனடைகின்றோம்.



ஏ.எம்.எப்.முஸ்னா,
நாங்கல்ல மு.ம.வித்., நாங்கல்ல, துல்கிரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் நிலையங்களால் புற்றுநோய் அபாயம்






நகர்ப்புறங்களில் மற்றும் புற நகர்ப்பகுதிகளில் காணப்படும் பெற்றோல் நிலையங்கள், வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையங்கள் என்பனவற்றால் மனிதர்களது உடல் நலனுக்கு கேடு ஏற்படும் அபாயம் இருப்பதாக அண்மைய ஆய்வொன்றின்மூலம் தெரிய வந்துள்ளது. குறிப்பாக, புற்றுநோய் தாக்கும் அபாயம் ஏற்படலாம் எனவும் தெரியவருகின்றது. ஸ்பெயினின் முர்சியா பல்கலைக்கழகத்தில் மார்ட்டா டோவல் என்பவர் தலைமையிலான குழுவினரே இது குறித்தான ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அந்த ஆய்வுகளின்படி, பெற்றோலில் காணப்படுகின்ற ரசாயனப் பொருட்களால் புற்றுநோய் ஏற்படலாம் எனவும் பெற்றோலில் காணப்படும் பென்ஸீன் (Benzene) எனும் ரசாயன பொருளினாலேயே புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாகவும் அறியவருகின்றது. இந்த பென்ஸீன் மூலக்கூறுகள் பெற்றோல் நிலையங்கள் அமைந்திருக்கும் இடத்திலிருந்து 100 மீற்றர் சுற்றளவு வரை பரவுவதாகவும் கூறுகின்றனர். இத்தகைய காரணத்தால், குடியிருப்பு பகுதிகளிலிருந்து குறைந்தது 500 மீற்றர் தூரத்திலாவது பெற்றோல் நிலையங்கள் அமைந்திருப்பது அவசியம் என்கின்றது இந்த ஆய்வறிக்கை.

# சுற்றுச்சூழலை சீர்குலைக்கும் 'அமிலமழை'



பெற்றோலிய எரிபொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளின் கழிவுகள் மூலம் சல்பர் ஒக்சைட் வாயுவும் நைட்ரஜன் ஒக்சைட்டுகளும் காற்றில் பெருமளவில் கலந்துவிடுகின்றன. இந்த வாயுக்களை மழைநீர் கரைத்து வருவதனால் சல்பூரிக் அமிலமும் நைட்ரிக் அமிலமும் மழை நீரின் அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்கின்றன. இந்த மழையின் மதிப்பு பி.எச். 5.6 இற்குக் குறைவாக இருப்பதால் அமிலத்தன்மையுடன் காணப்படுகின்றது. இவ்வாறு அமிலத்தன்மையுடன் பெய்யும் மழையே 'அமிலமழை' எனப்படுகின்றது. சுற்றுச் சூழல் மாசடைவதே இதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.



இந்த அமிலமழையால் பெருமளவில் சுற்றுச்சூழல்கள் சீர்குலைந்து வருகின்றன.



இந்தியாவின் ஆக்ராவில் அமைந்துள்ள தாஜ்மஹாலின் சலவைக் கற்கள் அமிலமழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அமில மழை பெய்யும் அனைத்து இடங்களில் உள்ள நச்சுத்தன்மையான பொருட்களைக் கரைத்து சுற்றுச்சூழலுக்கு சீர்கேட்டை உருவாக்குகின்றன. இதனால், மனிதர்களும் பல்வேறு விதமான நோய்களுக்கு உள்ளாகின்றனர். மேலும், சுவீடனின் காட்டு மரங்களின் வளர்ச்சிகளையும் இது பாதிப்பதோடு, அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான ஏரிகளில் மீன்கள் வாழ முடியாத அளவிற்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தியுள்ளது இந்த அமில மழை.


# அழியும் உயிரினங்களை மீண்டும் உருவாக்கும் 'ஸ்டெம் செல்'

'ஸ்டெம் செல்' என்பது பல செல் உயிரினங்களில் காணப்படும் உயிரணுக்களாகும். இவை முற்றிலும் மேம்பாடு அடையாத வகைப்பாட்டிற்கு உட்பட்டவை. உயிரணுப்பிளவின்போது, புதிய உயிரணுக்களை உருவாக்குவதுடன், வெவ்வேறு திசுக்களை உருவாக்கும் வல்லமை கொண்டவை. இதனால், மனிதனே அதிக நன்மைகளைப் பெற்றுள்ளான். ஆனால், தற்போது புலி, சிங்கம், காண்டா மிருகம் போன்ற அழிந்து வரும் உயிரினங்களை மீண்டும் உருவாக்க ஸ்டெம் செல் பயன்படும் என கெலிஃபோர்னியாவின் ஸ்கிரிப்ஸ் ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



ஸ்டெம் செல்லை உயிரின உடலில் செலுத்தும்போது, எவ்வகை செல்லாகவும் மாற்றிக்கொள்ளும் தன்மை கொண்டது. இதனை 'ப்ளூரிபொடென்ட்' (Pluripotant) என்பர். இரண்டு வகையான உயிரினங்களில் இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. மரபியல் ரீதியாக மனித இனத்துடன் தொடர்புடைய மனிதக் குரங்கு மற்றும் மரபியலில் புதிய பரிணாமம் உடைய காண்டாமிருகம். 'ப்ளூரிபொடென்ட்' முறையில் மனிதனுக்கு செலுத்தப்படும் அதே மரபணுக்களை இவ்விலங்குகளின் தோலில் செலுத்தி ஆய்வுகளை மேற்கொண்டபோது இந்த இரண்டு உயிரினங்களும் பயனடைந்துள்ளன. சமீப காலமாக மரபணு வேறுபாடு இன்மையால் காண்டா மிருகம் அழிந்து வருகின்றது. இந்நிலையில் ஆய்வாளர்களின் இப்புதிய முயற்சி வெற்றி பெற்றமையால் இதன்மூலம் மரபணு வேறுபாட்டை உருவாக்கி இவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கலாம் என அவர்கள் நம்புகின்றனர்.

**Pluripotent** Stem Cells








# ஆசிய பழுப்பு மேகம்

ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியா உட்பட, இலங்கை வரையில் ஏறத்தாழ ஒரு கோடி சதுர கிலோமீற்றர்கள் வரை பரவி இருக்கும் வாயுக்களையே 'ஆசிய பழுப்பு மேகம்' என அழைக்கின்றனர். கோடிக்கணக்கான மோட்டார் வாகனங்களும் லட்சக்கணக்கான தொழிற்சாலைகளும் வெளிவிடும் நச்சு வாயுக்கள் வான்வெளியை நிரப்பி வருவது நாம் அறிந்ததே! எரிபொருட்களின் கழிவுகளான இந்த வாயுக்கள் ஆசியப் பகுதிகளின் வான் வெளியில் பெரும் மேகத்திரளாக சூழ்ந்திருப்பதாக ஐ.நா.வின் சுற்றுச் சூழல் திட்டம் தெரிவித்துள்ளது.





இந்தியாவின் தேசிய ஆய்வு கூடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.மித்ரா, இந்த பழுப்பு மேகத்தை ஆய்வு செய்தபோது, இதனை சாம்பல், அமிலங்கள், தூசுகள் கலந்த 'கூட்டுக்கலவை' என்கின்றார். இந்த ஆசிய பழுப்பு மேகம் அமிலமழையாகப் பொழியும் வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். இந்த ஆபத்தான மேகம், சூரிய ஒளியை 15 சதவீதமும் மழையின் அளவை 40 சதவீதமாகவும் குறைக்கக்கூடியது எனவும் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*சிறுவர்களாகிய நீங்கள் உங்களது சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரித்துடையவர்கள். அதனால், சிறுவர்களாகிய உங்களுக்காகவே, 'சர்வதேச சிறுவர் தினம்' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. இதுபற்றி நாம் குறிப்பிடும்போது, நீங்கள் உங்கள் கல்வி சம்பந்தமான உரிமைகள் குறித்து அறிந்திருத்தல் அவசியமாகும்.*

# சிறுவர்களின் உரிமைகள் பற்றிப் பேசும் 'சிறுவர் தினம்'

## சிறுவர் உரிமைகள்

1. சிறுவர் உரிமைகள் பற்றிய விடயங்களில் அவர்கள் தொடர்பான விடயங்கள் குறித்து அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை இந்த பிரகடனம் ஏற்படுத்தியுள்ளதுடன், அதற்கு அதிக அக்கறையும் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது.

2. சுதந்திரமான சிந்தனை, தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை என்பன சிறுவர்களுக்கு இருப்பதுடன், அந்தக் கருத்துக்களை பேச்சு, எழுத்து மற்றும் சித்திரத்தினூடாக வெளிப்படுத்த முடியும். இவ்வாறான உங்களது கருத்துக்கள் பிறரைப் பாதிக்காத வண்ணம் அமைதல் அவசியமாகும்.

3. நட்புறவினைப் பேணுவதற்கும், பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகளை ஆரம்பித்து அவற்றில் பங்குபெறவும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு. எனினும், இந்த அமைப்புகள் மற்றும் சங்கங்கள் பிறரின் உரிமைகளைப் பாதிக்காதவாறு இருக்க வேண்டும்.

4. உடல்-உள வளர்ச்சியைப் பெறுவதற்காக, சிறுவர்கள் விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

5. கல்வியினைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு முழுமையான உரிமை உண்டு. ஆறு வயது முதல் பதினாறு வயது வரையிலான சிறுவர்களுக்கு கல்வி வழங்குவது அரசின் கடமை என்று பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6. மேலும், உடல்-உள ஆன்மீக மற்றும் சமூக ரீதியில் சிறுவர்களை முன்னேற்றத் தேவையான வழிகாட்டுதலினையும் பாடசாலைகளில் ஒழுக்கம் மற்றும் நிர்வாகத்திறன் மேம்படுத்தப்படுதலையும் இந்தப் பிரகடனம் எதிர்பார்க்கின்றது.

7. பலதரப்பட்ட அங்கவீனங்களைக் கொண்ட பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று விசேட கல்வியினையும் பாதுகாப்பினையும் அரவணைப்பினையும் பெறுவதற்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## சரத்துகள்

1989 இல் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களது உரிமைகள் பற்றிய சாசனம் 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. 1991 இல் இலங்கை இச்சாசனத்தினை ஏற்று அங்கீகரித்தது. இந்த சாசனத்தில் 54 பிரிவுகள் உள்ளன. இவற்றில் சிறுவர்களாகிய நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் அதிகம் உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

18 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இந்த சாசனத்தின்படி, சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர். இதன்படி, சிறுவர்களின் உரிமைகளை அமுல்படுத்தும்போது; இன, மத, சாதி, மொழி, அங்கவீனம், ஏழை-பணக்காரர், ஆண்-பெண் ஆகிய பாரபட்சங்கள் காட்டப்படக்கூடாது. அனைத்து சிறார்களையும் சமமாக மதிக்கவேண்டும். அவர்களுக்கான தேவைகளை அதிகபட்சம் வழங்குதல் என்பனவும் இந்த சாசனத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச சாசனத்தின் ஊடாக, சிறுவர்களது உரிமைகளுக்கான நிரந்தரத் தீர்வுகள் எப்பொழுதும் கிடைக்கும் என்று கருத முடியாது. ஆனால், சிறுவர்கள் தொடர்பாக செயலாற்றும் அனைத்து நபர்களுக்கும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதலையும், அதற்கான அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளுதலையும் இது குறிக்கும்.



**ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமாகும்**

சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் எமது பாடசாலைக்கல்வி இலங்கை பாடசாலைக் கல்வித்துறையில் உத்தியோகபூர்வமான முறையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. ஐந்து வயது பூர்த்தியான அனைத்து பிள்ளைகளும் அரசப் பாடசாலைகளில் சேர்ந்து கல்வி கற்க முடியும். இந்த வாய்ப்பு பல்கலைக்கழகக்கல்வி வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. குறைந்த வருமானமுடைய குடும்பத்தினைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் கிடைக்கின்றன. பாடசாலைப் பாடப்புத்தகங்கள், சீருடைகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

எந்தவிதமான பாரபட்சமும் அற்ற முறையில் இலவசக் கல்வியினைப் பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் சிறுவர் உரிமைகள் பற்றிய விசேட சரத்துக்கள் சில....

**19 ஆம் சரத்து** - துஷ்பிரயோகங்களில் இருந்தும் கைவிடப்படுதலிலிருந்தும் பாதுகாப்புப் பெறல்.

**24 ஆம் சரத்து** - சுகாதார மற்றும் சுகாதாரச் சேவைகள்

**32 ஆம் சரத்து** - கல்விக்கு இடையூறு விளைவிக்கும் மற்றும் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகள்

**34 ஆம் சரத்து** - பிள்ளைகளின் உடலைப் பயன்படுத்த உரிமை இல்லை.

**37 ஆம் சரத்து** - சித்திரவதை செய்தல், சுதந்திரத்தினைத் தடுத்தல் மற்றும் கல்வியினைத் தடுத்தல் பிள்ளைகளுக்கான உரிமை மீறலாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

✱✱ ஹெப்லட் பெக்கார்ட் (HP) ரகத்திலான பிரின்டரில் கார்ட்ரிஜ்ஜினை பொருத்தியிருக்கின்ற போதிலும் கார்ட்ரிஜ் அதில் பொருத்தப்படவில்லை என்று அதில் காட்டப்படுமாயின் அதற்கான காரணம் என்ன?

பிரின்டரில் பொருத்தியுள்ள 'கார்ட்ரிஜ்ஜில்' இன்க் (மை) அளவு மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்குமாயின் அதனை செயற்படுத்தாத நிலையைத் தோற்றுவிக்கும் சில வகை பிரின்டர்கள் உள்ளன. இத்தகைய கார்ட்ரிஜ்ஜினை ரீஃபில் (Re fill- மீள் நிரப்புகை) செய்து பொருத்துகின்ற போதிலும் கார்ட்ரிஜ் அதில் இல்லை என்ற 'மெசேஜ்ஜே' கிடைக்கப்பெறுவதுண்டு.

அவ்வாறு இல்லாமல் புதிய கார்ட்ரிஜ் ஒன்றினைப் பொருத்தினாலும் இந்தக் கோளாறு மெசேஜ் கிடைக்கப்பெற்றுக் கொண்டே இருந்தால் இரண்டு விதமான கோளாறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று ஊகிக்க முடியும்.



அத்தகைய கோளாறுகள் வருமாறு:

முதலாவது: கார்ட்ரிஜ்ஜின்







சேர்கிட்டில் ஒட்டியுள்ள பிளாஸ்டிக் கவர் பகுதியினைக் கழற்றாமல் அப்படியே பிரின்டரில் உள் நுழைப்பதாலும் இத்தகைய கோளாறுகள் ஏற்படலாம் அல்லது கார்ட்ரிஜை ஒழுங்கு முறையில் பிரின்டரில் உட்செலுத்தாத போதிலும் கோளாறாக அது வெளிப்பட முடியும்.

இரண்டாவது: பிரின்டரில் ஏற்பட்டுள்ள கோளாறின் காரணமாகவும் 'கார்ட்ரிஜ்' 'டிடெக்ட்' ஆகாத நிலை ஏற்படுவதுண்டு. இத்தகைய கோளாறினை தவிர்ப்பதற்கு தகுதிவாய்ந்த திருத்துனர் ஒருவரை நாடுவது நன்று.

★★ கணினியை இயக்கத் தொடங்கியதும் சில வேளைகளில், 'ஸ்டார்ட் மெனு' வில் உள்ள 'பார்' (Bar) காணாமல் போய்விடுவதுண்டு. 'மௌஸின்' மூலம் அதனை அலசித் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதுண்டு. இத்தகைய சிக்கலிலிருந்து விடுபடுவது எவ்வாறு?



பொதுவாக, விண்டோஸ் பார் (Windows Bar) ஆனது, 'டெஸ்க் டொப்' திரையின் கீழ்ப்புறமே தோன்றுகின்ற போதிலும் அதன்மீது 'மௌஸ்மூலம் கிளிக் செய்து 'டிரக்' செய்வதன்மூலம் 'டெஸ்க்டொப்' திரையின் மேல்புறம்கீழ்புறம், வலதுபுறம், இடதுபுறம் என நாலா புறமும் அதனை நகர்த்திச் செல்லமுடியும்.

ஆனாலும், 'Auto Hide Option' இனை பாவனையில் இட்டிருந்தால் 'டாஸ்க் பார்' காணாமல் போய்விடுவதுண்டு. மௌஸின்மூலம் இதனை தேடிக் கண்டுபிடிப்பதற்குத் திரையின் நாலா புறமும் அதனை நகர்த்திச்சென்று பாருங்கள். அப்படியும் 'டாஸ்க்பார்' கண்டுபிடிக்கப்படாவிட்டால், கணினியின் 'சிஸ்டம்' முறையில் ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதமுடியும். கணினியில் C:I பார்ட்டிஷனை 'ஃபோமெட்' செய்தவாறே, விண்டோஸ் புரோகிராமை 'இன்ஸ்டோல்' செய்யுங்கள். அதன் பின்னர் மிக விரைவாக வைரஸ் கார்ட் (Virus Guard) மூலமாக கணினி 'ஸ்கேன்' செய்து கொள்ளமுடியும்.

✱✱ தொலைக்காட்சித் திரைக்கும் கணினித்திரைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?



தொலைக்காட்சித் திரையில் அகலமாகவும் (horizontial) நேராகவும் (vertical) வர்ணங்களைக் காட்டுவதற்காக, கதிர்வீச்சினை மேற்கொள்வதற்குப் பொதுவான இயங்குமுறைகளே செயற்படுகின்றன. அதேவேளை, இவை சாதாரண கணினித்திரையில் பயன்படுத்தப்படும்போது, குறித்த இயங்குமுறைகள் குறைந்த அளவிலேயே இருப்பதனால் தொலைக்காட்சித் திரையில் உள்ள 'பிக்ஸெல்' (Pixel) அளவு குறைவாக இருக்கும். ஆனால், கணினித்திரையில் அதனையும் விட கூடிய அளவிலேயே 'பிக்ஸெல்' காணப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சித் திரையில் பார்க்கப்படுகின்ற எழுத்துக்களை கணினித் திரைக்கு மாற்றிப்பார்க்கும்போது, அவை தெளிவின்றிக் காணப்படுவதைக் குறிப்பிடலாம்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 28, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org